# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2013

என்ஜீஜேஏ/6/ஆண்டறிக்கை 2013 2014.02.25

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு,
82, ''சம்பத்பாய''
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

கௌரவ அமைச்சர்,

**2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 32 (3) ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழும் கீழ்க்காணும் ஆவணங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

1. 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் நிருவாக அறிக்கை.
2. கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முறையாகக் கணக்காய்வு செய்யப்பட்ட இவ் அதிகார சபையின் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையும், 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கும்.
3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நன்றி
உங்கள் உண்மையுள்ள

அமித்த கமகே
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

## எமது செயற்பணி

"இலங்கையை நீல மாணிக்கங்களுக்கும் நிற மாணிக்கங்களுக்குமான முன்னணித் தயாரிப்பாளராக்கி உலகிற்கு உயர் தரத்திலான ஆபரணங்களிற்கான ஓர் பிராந்திய மைய வழங்குனராக முன்னணியில் திகழ்வதாகும்"

## எமது பிரதான பணி

"எம்மில் அக்கறையுடைய தரப்பினர்களுக்கு நேர்மையான நலன்களைப் பகிர்வதற்காகவும் உரிய தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் நம்பகமான தரச் சான்றிதழ் முறை ஒன்றினூடாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வியாபாரத்தை அதிகரிக்கும் கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் சிறந்த வசதிகளை வழங்குவதே எமது நோக்காகும்."

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் சபைப் பணிப்பாளர்கள் - ஆண்டு 2013

| | | | சேர்ந்த திகதி | கடமையில் இருந்து இராஜினாமாச் செய்த திகதி |
|---|---|---|---|---|
| 01. | திரு. பிரசாத் கல்ஹேன | தலைவர் | 05.01.2012 | 17.04.2013 |
| 02. | திரு. அமித்த கமகே | தலைவர் | 17.04.2013 | |
| 03. | திரு. சரத் சமரகோன் | உறுப்பினர் | 14.05.2010 | 17.04.2013 |
| 04. | திரு. ஆர்.எம். ஜயதிலக்க | உறுப்பினர் | 14.05.2010 | 17.04.2013 |
| 05. | திரு. ஜானக்க ரத்னாயக்க | உறுப்பினர் | 30.06.2010 | 17.04.2013 |
| 06. | திரு. மொகமட் பைசால் ரசீன் | உறுப்பினர் | 30.06.2010 | 17.04.2013 |
| 07. | திரு. ரீ.கே.என்.சீ.தியம்பரவத்தை | உறுப்பினர் | 17.04.2013 | |
| 08. | திரு. பீ.எச்.ஓ. சந்ரவன்ஸ | உறுப்பினர் | 30.04.2013 | |
| 09. | திரு. ஏ.கே சௌவிரத்ன | உறுப்பினர் | 30.04.2013 | |
| 10. | திருமதி. சந்ரா ஏகனாயக்க | உறுப்பினர் | 30.04.2013 | |
| 11. | திரு. பந்துல எகொடகே | உறுப்பினர் | 26.06.2013 | |
| 12. | டாக்டர்.டபிள்யூ.எல்.டீ.ஆர்.ஏ.குமாரதிலக்க | உறுப்பினர் | 30.04.2013 | |
| 13. | திரு. ரீ.எம்.சிறிசோம | உறுப்பினர் | 17.04.2013 | |
| 14. | திரு. அருண லேகம்கே | உறுப்பினர் | 17.04.2013 | |
| 15. | திரு.ஆர்.டீ.எஸ்.முனசிங்க | உறுப்பினர் | 06.05.2013 | |
| 16. | திரு. எஸ்.எம்.என்.லலித் சேநானாயக்க | உறுப்பினர் | 06.05.2013 | |
| 17. | திரு. ஆர்மில் சாமூன் | உறுப்பினர் | 17.04.2013 | |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான 2013 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை**

**01.** 2013 ஆம் ஆண்டு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் செயற்பாடுகளின் 19 ஆவது ஆண்டைக் குறிக்கின்றது. மீளாய்வாண்டிற்கான அதன் செயற்பாடுகள் இரத்தினபுரி தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பிலுள்ள அலுவலகம் மூலமாகவும், இரத்தினபுரி, எகலியகொட, மாத்தறை, நாவுல, மொனறாகல, கட்டுநாயக்க பிராந்திய அலகுகளின் மூலமாகவும் கட்டுநாயக்கா விசேட இரத்தினக்கல் நிலையம் மற்றும் உலக வர்த்தக மையத்திலுள்ள இரத்தினக்கல், ஆபரண பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் மூலமாகவும் நடாத்தப்பட்டுள்ளன.

**02.** **அதிகார சபையின் பணிகள் :**

(அ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்,

(ஆ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களை ஆரம்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்,

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான சந்தையைப் பயன்படுத்தலும் உலக சந்தைகளில் அத்தகைய இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான தேவையை ஊக்குவித்தலும்,

(ஈ) இரத்தினக்கல் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் ஆகியவற்றின் தொடர்பிலான சகல அம்சங்கள் மீதும் விசேடமாகச் சூட்டுப் பதனிடுகை, இரத்தினக்கல் பட்டை தீட்டல் ஆகியவற்றில், இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆளணியினர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படுவதை ஊக்குவித்தலும் அவற்றிற்கு ஆதரவளித்தலும்,

(உ) வளவாய்ப்புள்ள கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் நம்பிக்கையை உருவாக்குவதற்குத் தேவையான நடடிக்கைகளை எடுத்தல்,

(ஊ) சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்தலையும் இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களைச் சட்ட விரோதமாக அகற்றுதலையும் தடைசெய்தல்,

(எ) அரசாங்கத்திடம் சுரங்க அகழ்வு அல்லது இரத்தினக் கல் அகழ்தல் உரிமைகள் ஏதேனும் ஒதுக்கம் அல்லது பிற காரணத்தின் நிமித்தம் இருக்குமிடத்து அரசாங்க காணியில் அல்லது அரசாங்க காணிக்கு மேல் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் தீர்வு செய்யப்பட்ட காணியில் அல்லது காணியின் மேல் இரத்தினக்கற்கள் அகழ்வதற்கான உரிமையைப் பராதீனப்படுத்து வதற்குப் பொறுப்பான பிரத்தியேக அதிகாரசபையாகக் கடமையாற்றுதல்.

(ஏ) இரத்தினக்கற்கள், ஆபரணங்களின் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்ப மற்றும் பிற ஆலோசனைகளையும் உட்கட்டமைப்பு ஆதரவையும் வழங்குதல்,

(ஐ) எந்த அட்டவணைப்படுத்திய எழுத்திலான சட்டத்தின் நிருவாகத்தையும் அது பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக இருக்குமிடத்து மேற்கொள்ளுதல்,

(i) அது, இரத்தினக்கற்களின் அல்லது இரத்தினக்கல் கைத்தொழிலின் விடயத்தில் ஏற்புடைத்தானதாகவிருக்குமிடத்து

அல்லது

(ii) இச் சட்டத்தின் கீழ் இவ்வதிகாரசபையானது அதன் அதிகாரங்கள், பணிகள், கடமைகளை செயற்படுத்துவதையும் நிறைவேற்றுவதையும் மேற்கொள்வதையும் இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவ்வண்ணம் செய்வது தேவையானதாக இருக்குமிடத்து,

(ஒ) இரத்தினக்கற்களின் சான்றுப்படுத்தலுக்கும் அருமையான உலோகங்களைப் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்தும் அலுவலகங்களை ஸ்தாபித்தல்,

(ஓ) உற்பத்தியாளரொருவரின் கோரிக்கையின் பேரில் விதத்துரைக்கப்பட்ட விதத்தில் ஹால்மாக் முத்திரை ஒன்றுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆபரணங்களுக்கு முத்திரையிடல்.

(ஔ) இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலினதும் ஆபரணக் கைத்தொழிலினதும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் கூட்டிணைப்பதற்குமாக இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இடையே தேவையான இணைப்பை ஏற்படுத்துதல்,

(க) இரத்தினக்கல் கைத்தொழிலும் ஆபரணக் கைத்தொழிலும் பணியாற்றுகின்ற ஆட்களின் வேலையின் நியதிகள், நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பாக அத்தகைய ஆட்களை உயிராபத்திலிருந்தும் அங்க ஆபத்திலிருந்தும்

பாதுகாப்பதற்கு எடுக்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்தலும்.

### 3. நிதி

#### 3.1 திரவத்தன்மை

இவ்வாண்டின் ஆரம்பத்தில் காசு, காசிற்குச் சமனானவைகள் ரூபா 48.377 மில்லியனாக இருந்தது. இவ்வாண்டின் இறுதியில் இது ரூபா 97.961 மில்லியனாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் முதிர்வுவரையுள்ள முதலீடுகள் (திறைசேரி உண்டியல்) ரூபா 191.610 ஆகவும் ஆண்டின் இறுதியில் ரூபா 216.381 மில்லியனாகவும் காணப்பட்டது. ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள ஏனைய நிதிச் சொத்துக்கள் ரூபா 544.706 மில்லியனாகவும் ஆண்டின் இறுதில் இது ரூபா 639.376 மில்லியன் தொகையாகவும் காணப்பட்டது.

#### 3.2 இலாபத் தகவு

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| மொத்த வருமானம் | 258.180 | 219.443 | 228.962 | 250.300 | 612.004 | 507.542 |
| மொத்த செலவினம் | 228.772 | 230.942 | 261.929 | 222.488 | 261.076 | 387.458 |
| **இலாபம் (வரிக்கு முன்னர்)** | **29.408** | **(11.498)** | **(32.967)** | **27.812** | **350.928** | **120.084** |

### 04. மனித வளங்கள்

தொழிசார் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் அதிகாரசபையின் பதவியினர்கள் 245 பேர்களாக இருந்தனர். எமது குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி, உயர் முன்னுரிமையாகக் கருதப்படுவதுடன் மனித வள அபிவிருத்திக்கு வாய்ப்பு வழங்குவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 05. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

இந்த அதிகாரசபையின் பிராந்தியக் கூறுகளினாலும் கொழும்பு அலுவலகத்தினாலும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்காகக் கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினக்கல் அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் | 4,204 | 3,970 | 4,061 | 4,687 | 5,956 | 6,565 |
| இரத்தினக்கல் வணிகர்கள் அனுமதிப்பத்திரங்கள் | 4,794 | 4,036 | 4,195 | 4,422 | 4,382 | 4,429 |
| பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரங்கள் | 194 | 174 | 168 | 179 | 177 | 192 |
| இரத்தினக்கல் ஏலவிற்பனை அனுமதிப்பத்திரங்கள் | 300 | 217 | 262 | 277 | 364 | 624 |
| **மொத்த அனுமதிப்பத்திரங்கள்** | **9,527** | **8,357** | **8,686** | **9,565** | **10,879** | **11,810** |

### 06. அதிகாரமளிக்கப்படாத இரத்தினக்கல் அகழ்வையும் சூழலுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதையும் கட்டுப்படுத்தல்

சட்ட விரோதமான இரத்தினக்கல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும் சூழலின் அழிவைத்தடுப்பதற்குமாக மீளாய்வுக் காலப்பகுதியில் இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பல்வேறு திடீர்ச் சோதனைகளை மீளாய்வுக் காலப்பகுதியில் நடாத்தியுள்ளனர். குற்றப் பணங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 11.862 மில்லியனாகும். அதிகாரசபையானது பல பகுதிகளில் கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழிகளை மூடுவதற்கும் சேதமடைந்த ஆற்றோரங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### 07. சேவைகளும் பிற அபிவிருத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளும்

#### 7.1 ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நடவடிக்கைகள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச வியாபாரச் சந்தைக் கண்காட்சிகளில் “இலங்கைக்கான களம்” அனுசரணையாளராகவும் ஒழுங்கமைப்பாள ராகவும் இருத்தல்.
   - i. ‘‘ஜுவலரி சங்காய்’’ – கண்காட்சி 2013 மே 10 –13
   - ii. ஜேசீகே லாஸ் வெகாஸ் கண்காட்சி – 2013 மே 31 – ஜுன் 3 வரை
   - iii. சிங்கப்பூர் சர்வதேச ஆபரணக் கண்காட்சி – 2013 ஜுலை 4 – 7 வரை

iv. சீன சர்வதேச ஆபரணக் கண்காட்சி – 2013 ஒக்டோபர் 31 முதல் - நவம்பர் 4 வரை
v. சீன சர்வதேச தங்கம், ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் வர்த்தகக் கண்காட்சி - 2013 நவம்பர் 8 – 11 வரை

02. பின்வரும் சந்தர்ப்பங்களில் இரத்தினக்கல் ஆபரணத் துறையின் பங்கேற்பை ஒழுங்கமைத்தல்.

i. இலங்கை சுற்றுலாத் துறையால் ஒழுங்கமைக்கப்பட்ட மும்பாய் மற்றும் பெங்களூரில் 3 நாள் பெரும் ஊக்குவிப்பு.
ii. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட தெற்காசியப் பொருட் கண்காட்சி
iii. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட 82 ஆவது இஸ்மிர் சர்வதேசக் கண்காட்சி

03. உள்ளூர் விற்பனைச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகளுக்கு அனுசரணையளித்து ஒழுங்கமைத்தல்.

i. தேசிய வர்த்தக சம்மேளனத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுர்வேத ஏக்ஸ்போ 2013"
ii. 23 ஆவது இலங்கை சர்வதேச இரத்தினக்கல், ஆபரண கண்காட்சி - "பஸட்" ஸ்ரீ லங்கா 2013
iii. இலங்கை இரத்தினக்கல்லியல் அமைப்பால் ஒழுங்கமைக்கப்பட்ட ஜுவெல்ஸ் 2013

04. வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தங்க இறக்குமதியைக் கண்காணித்து வசதியளித்தல்.

05. இரத்தினக்கல், ஆபரணச் சமூகத்திற்கு அவர்களது இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக (50,000 அமெரிக்க டொலர்களுக்குக் குறைவான) அன்னிய செலாவணி வழங்கலை பரிந்துரைத்துக் கண்காணித்தல்.

06. இலங்கையின் இரத்தினக்கல், ஆபரணத் துறைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பிரஜைகளுக்காக தங்குமிட வீசாக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் புதுப்பித்துக்கொள்வதற்கும் உரிய அமைச்சிடம் பரிந்துரைக் கடிதங்களை வழங்குதல்.

07. இலங்கையின் இரத்தினக்கல், ஆபரணத் வியாபாரச் சமூகத்தின் தேவைப்பாட்டில் உரிய நாடுகளின் வீசா உத்தியோகத்தர்களுக்கு அவர்களது வீசாக்களை நடைமுறைப்படுத்துவதற்காக வீசாக் கடிதங்களை வழங்குதல்.

08. ஓர் தனிப்பட்ட இணையத்தினை நிர்வகித்தல் - www.srilankagemautho.com

09. இலங்கையின் இரத்தினக்கல் ஆபரணக் களத்தின் அரசாங்க அனுசரணையாளராக ''இலங்கை இரத்தினக்கல் ஆபரண பரிமாற்றல்'' வசதியளித்து முன்னேற்றுதல்.

10. குருநாகல் மாவட்டத்தைச் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆபரணத் தயாரிப்பாளர்களுக்காக ஆபரணத் தயாரிப்பு உபகரணங்களையும் பொறிகளையும் வழங்குதல்.

11. ஆபரணக் கைத்தொழிலிலான புதிய போக்குகள் மற்றும் தரங்கள் குறித்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்காக விளிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நடாத்துதல்.

12. இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆபரணத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் ஆபரணப் பொருட்களை மேம்படுத்தி சந்தைப்படுத்துவதற்காக ''இரத்தினதீப'' காட்சி அறை மற்றும் விற்பனைக் கூடத்தை முகாமைத்துவம் செய்து செயற்படுத்துதல்.

13. இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், கருவிகள், இயந்திர உபகரணங்களின் இறக்குமதிக்காக வரிச் சலுகைகளில் உதவியளித்தல்.

14. அரசாங்க அல்லது தனியார் துறைகளின் பிரதிநிதிகளது உத்தியோகபூர்வ அல்லது வியாபார பணிகளிற்கு வசதியளித்தல்.

15. வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கட்டுநாயக்க எயர் கார்கோ கிராமத்தில் இரத்தினக்கல் நிலையத்தில் ஏற்றுமதி வசதிகளை நாள் முழுவதும் வழங்குதல்.

16. பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீது "கிம்பளி பிரோஸஸ் சேர்ட்டிபிகேஷன் ஸ்கீம்" சான்றுபடுத்தல் திட்டத்திற்கு வசதியளித்து கண்காணித்தல்.

**08. இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதிகள்**

கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மீளாய்வாண்டான 2013 ஆம் ஆண்டிலும் இலங்கை இரத்தினக்கல், ஆபரண ஏற்றுமதிகளின் நிலையைக் காண்பிக்கின்றன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| இரத்தினக்கல் ஏற்றுமதிகள் | 8,281.055 | 7,225.8 | 7,488.6 | 10,027.6 | 14,557 | 14,805 |
| இரத்தினக்கல் – என் எஸ்எஸ் விசேட செயற்திட்டம் | - | - | - | - | - | 1,839 |
| ஆபரண ஏற்றுமதிகள் | 1,727.926 | 1,522.9 | 1,490.5 | 1,732.3 | 2,444 | 2,194 |
| கெவுடா ஏற்றுமதிகள் | 163.634 | 107.7 | 136.5 | 146.7 | 225 | 122 |
| வைர மீள் ஏற்றுமதிகள் | 44,393.700 | 35,965.96 | 36,030.1 | 45,381.1 | 52,893 | 37,885 |
| வைர ஆபரண ஏற்றுமதிகள் | 932.390 | 417.5 | 312.5 | 375.8 | 324 | 229 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **55,498.705** | **45,239.86** | **45,458.20** | **57,663.5** | **70,443** | **57,074** |

அமித்த கமகே
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை *2014-02-27*

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2013 ரூபா சதம் | 2012 ரூபா சதம் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | 3 | 227,741,261 | 245,815,430 |
| குத்தகைக் காணி (காணியைப் பயன்படுத்தும் உரிமை) | 4 | 30,727 | 33,091 |
| அருவச் சொத்துக்கள் | 5 | 357,792 | 566,667 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்து | 6 | (18,292,344) | (16,062,221) |
| ஏனைய சொத்துக்கள் | 7 | 371,939,331 | 371,939,331 |
| விற்பனைக்காக நிதிச் சொத்துக்கள் | 8 | 1,200,000 | 1,200,000 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **582,976,766** | **603,492,298** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | 9 | 2,160,405 | 1,699,601 |
| பெறவேண்டியவைகள் | 10 | 9,396,134 | 12,310,785 |
| முதிர்வடைந்த முதலீடுகளில் உள்ளவை | 11 | 216,381,558 | 191,609,933 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 12 | 32,709,520 | 31,690,952 |
| முற்பணச் செலவினங்கள் | | - | 499,457 |
| ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 13 | 13,659,749 | 13,749,877 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 14 | 639,376,488 | 544,706,305 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 15 | 97,964,396 | 48,377,798 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **1,011,648,249** | **844,644,708** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,594,625,015** | **1,448,137,006** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **உரிமை மூலதனம்** | | | |
| பங்களிப்பு மூலதனம் | 16 | 30,000,000 | 30,000,000 |
| இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | 17 | 26,927,498 | 27,227,498 |
| ஆபரண அபிவிருத்தி நிதியம் | 18 | 29,059,263 | 23,657,481 |
| இரத்தினக்கல் பரிசூதிய நிதியம் | 19 | 36,511,450 | 33,302,890 |
| இரத்தினக்கல் மீள்மதியீட்டு ஒதுக்கம் | 20 | 355,074,648 | 355,074,648 |
| மீள்மதியீட்டு ஒதுக்கம் | 21 | 52,945,424 | 52,945,425 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானம் | | 440,155,420 | 383,673,444 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **970,673,703** | **905,881,386** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| இளைப்பாறல் கடன் கடப்பாடு | 22 | 23,995,857 | 18,607,015 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 6 | - | - |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்கு மேல் முதிர்வுக் காலம் உள்ள தீர்ப்பனவுகள் | 23.1 | 11,680 | 13,241 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | **24,007,537** | **18,620,256** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்குள் முதிர்வுக் காலம் உள்ள தீர்ப்பனவுகள் | 23.1 | 2,230 | 2,495 |
| செலுத்த வேண்டியவைகள் | 24 | 64,715,858 | 38,172,804 |
| இரத்தினக்கல் படிவுகள் | | 326,673,784 | 226,048,309 |

| | | | |
|---|---|---|---|
| பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும் | 25 | 96,452,755 | 72,284,306 |
| நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் | 26 | 92,638,388 | 166,462,222 |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | 27 | 19,460,760 | 20,665,228 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **599,943,775** | **523,635,364** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **1,594,625,015** | **1,448,137,006** |

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

.............................. ..............................

**தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்** **பிரதம கணக்காளர்**

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

### திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் |
| வருமானம் | 28 | 370,695,500 | 530,208,556 |
| ஏனைய வருமானம் | 29 | 26,730,178 | 34,191,429 |
| நிர்வாகச் செலவுகள் | 30 | (126,580,200) | (96,694,548) |
| ஆளணிச் செலவுகள் | 31 | (130,071,227) | (116,196,580) |
| ஊக்குவிப்புச் செலவுகள் | 32 | (30,807,746) | (48,184,513) |
| **செயற்பாட்டு இலாபம்** | | **109,966,504** | **303,324,343** |
| தேறிய நிதி வருமானம | 33 | 110,117,497 | 47,603,957 |
| **தேறிய நிதி வருமானத்தின் பின்னரான இலாபம்** | | **220,084,001** | **350,928,300** |
| திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு | | (100,000,000) | - |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **120,084,001** | **350,928,300** |
| வருமான வரிச் செலவினங்கள் | 34 | (60,921,156) | (165,810,740) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **59,162,844** | **185,117,561** |
| ஆண்டிற்கான இலாபம் | | 59,162,844 | 185,117,561 |
| ஏனைய விபரமான வருமானம் | | - | - |
| **ஆண்டிற்கான விபரமான வருமானம்** | | **59,162,844** | **185,117,561** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| **வரிக்கு முன் இலாபம்** | **120,084,001** | **350,928,300** |
| **பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 25,259,064 | 13,093,088 |
| அருவகச் சொத்துக்களின் காலக்கழிவு | 208,875 | 376,375 |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | 8,115,151 | (115,661) |
| பங்கிலாபங்கள் | (1,351,171) | (838,432) |
| நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்புகளினாலான இலாபம் | (103,034) | (10,976,843) |
| வட்டி வருமானம் | (110,141,997) | (47,138,919) |
| குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பொறுப்புகள் மீதான நிதிக் கிரயம் | 24,500 | 24,190 |
| காணிப் பயன்பாட்டு உரிமைகளுக்கான காலக்கழிவு | 2,364 | 2,364 |
| வைப்புகள் மற்றும் முற்பணங்களின் சேத இழப்பிற்கான ஏற்பாடு | - | 76,500 |
| அறவிட முடியாக் கடன்கள் | 1,404,560 | - |
| சட்டக்கோரல்களுக்கான ஏற்பாடு | 3,400,000 | 195,300 |
| ஆதன, பொறி, உபகரணங்களின் சேதத்திற்கான ஏற்பாடு | 1,952,934 | 2,934,756 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **48,855,247** | **308,561,018** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புகள் | (460,804) | 646,378 |
| பெறவேண்டியவை | 2,914,651 | 4,087,819 |
| வைப்புகள் மற்றும் முற்பணங்கள் | (1,018,568) | 43,168 |
| முற்கொடுப்பனவுச் செலவினங்கள் | 499,457 | 155,699 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 90,128 | 952,591 |
| செலுத்த வேண்டியவை | 26,543,054 | (3,220,158) |
| இரத்தினக்கல் அகழ்வு வைப்புக்கள் | 100,625,475 | 75,719,776 |
| பெற்ற வைப்புகளும் முற்பணங்களும் | 24,168,449 | 16,276,554 |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | (1,799,657) | 18,941,525 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவான காசு** | **200,417,432** | **422,164,369** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (2,726,309) | (10,848,643) |
| செலுத்தப்பட்ட வரிகள் | (135,980,365) | (7,123,178) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **61,710,758** | **404,192,548** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதன, பொறி, உபகரணங்களின் கொள்வனவு | (12,141,003) | (59,737,840) |
| நிலையான சொத்துக்கள் அகற்றுவதன் மூலமான பெறுவனவுகள் | 130,700 | 10,976,843 |
| அருவகச் சொத்துக்களின கொள்வனவு | - | - |
| பெற்ற பங்கிலாம் | 901,934 | 838,432 |
| ஏனைய நிதிச் சொத்துக்களின் தேறிய முதலீடுகள் | (94,670,183) | (240,365,948) |
| திறைசேரி உண்டியல்களில் தேறிய முதலீடுகள் | (24,771,625) | (160,141,058) |
| பெற்ற வட்டி | 110,141,997 | 47,138,919 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **(20,408,179)** | **(401,290,651)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| இரத்தினக்கல் அகழ்வின் நலன்புரி நிதியப் பயன்பாடு | (300,000) | (129,000) |
| குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பொறுப்புகளின் தீர்ப்பனவு | (26,325) | (26,325) |
| ஆபரண அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பு | 5,401,782 | 6,202,398 |
| இரத்தினக்கல் பரிசூதிய நிதியப் பங்களிப்பு | 3,208,560 | 3,803,702 |
| **நிதி நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **8,284,017** | **9,850,774** |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள் | 49,586,597 | 12,752,671 |
| ஆண்டின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 48,377,798 | 35,625,127 |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** (குறிப்பு 15) | **97,964,396** | **48,377,798** |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

## 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

### 1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

#### 1.1 தயாரிப்பு அடிப்படை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் (அதிகாரசபை) நிதிக்கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs). அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிச் சொத்துக்கள் அவற்றின் வரலாற்றுக் கிரயம், அவற்றின் விற்பனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படக் கூடிய நியாயப் பெறுமதிக்கு மாற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் (SLFRSs) விபரிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோக நடைமுறையில் அதன் நடுநிலைத் தன்மையை முகாமைத்துவம் பிரயோகிப்பதற்கு அது வேண்டப்படுகின்றது. உயர் மட்ட நடுநிலைத் தன்மைகள் அல்லது சிக்கல்கள் அடங்கிய பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகையில் அவை 2.17 குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

#### 1.2 கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் குறிப்பிடப்பட்டாலன்றி, சுருக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது முதல் SLFRSs மாற்றப்பட்ட திகதியின் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்று வரையான காலப்பகுதியின் போது தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டிருந்தன.

முன்னைய ஆண்டின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றின் வெளிப்படுத்தலும் வகைப்படுத்தலும் உரிய வகையில் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் நடப்பாண்டினதுடன் ஒப்பிடுவதற்கு ஏதுவான வகையிலும் திருத்தப்பட்டுள்ளது.

#### 1.3 அன்னிய செலாவணிப் பரிமாற்றம்

##### 1.3.1 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும் நிறுவகம் செயற்படும் முதல்நிலைப் பொருளாதார சுற்றாடல் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்பட்டதாகும். அதிகாரசபையின் வெளிப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாக்களில் (ஏல்கேஆர்) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

##### 1.3.2 கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற திகதியில் நிலவும் பரிமாற்று விகிதத்தைக் பயன்படுத்தி செயற்பாட்டு நாணயத்திற்கு அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பரிமாற்றப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிலிருந்து விளைபவற்றையும் அன்னிய செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் ஆண்டின் இறுதியிலான பரிமாற்றங்களிலிருந்தான அன்னிய செலாவணிப் பரிமாற்று இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காலக்கழிவுக் கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பான பரிமாற்றல் வேறுபாடுகளும் விபரமான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டடுள்ளன.

##### 1.3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அங்கீகரிக்கப்பட்டு முகாமைத்துவத்தால் வேண்டப்பட்டவாறு இயங்கும் நிலைக்கும் தற்போதைய இடத்திற்கு கொண்டுவரப்படுவதற்காக நேரடியாக ஏற்கப்படும் எந்தக் கிரயத்தையும் உள்ளடக்கியுள்ளன.

1998 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள்மதியிடப்பட்ட தொகைகளில் காண்பிக்கப்பட்டுள்ளன. மீள்பெறுமதியிடப்பட்ட தொகை மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் நிலவிய நியாயப் பெறுமதியுடன் பாரியளலில் ஒப்பிடப்பட்டமையால் அதனையே மீள்பெறுமதியிடப்பட்ட தொகையாக அதிகாரசபை ஏற்றுக்கொண்டிருந்தது. இதன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர் கிரயங்கள் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறில்லாத விடத்து அதிகாரசபைக்கு விடயத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதார நலன் பாய்ச்சப்பட்டு விடயத்தின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகையில் மாத்திரமே ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. சகல ஏனைய திருத்தங்களும் பராமரிப்பும், அவை உறப்பட்ட நிதிக் காலப்பகுதிக்கான விபரமான வருமானக் கூற்றில் சாட்டப்பட்டுள்ளன.

காணி பெறுமானத்தேய்விடப்படாததுடன் ஏனைய சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலப்பகுதியில் அவற்றின் கிரயம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தினை ஒதுக்கும் வகையில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்றது.

| சொத்துக்களின் வகை | | வீதம் |
|---|---|---|
| கட்டிடங்கள் | 30 - 50 வருடங்கள் | 2% - 3.33% |
| பாகமாக்கல் | 3 வருடங்கள் | 33.33% |
| ஆய்வுகூடமும் ஆபரண ஆய்வு உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 4 வருடங்கள் | 25% |
| கணனி உபகரணங்கள் | 5 வருடங்கள் | 20% |
| ஏனையவை | 10 வருடங்கள் | 10% |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் உயர்வானதெனில் அதன் அறவிடப்பட வேண்டிய தொகையிலிருந்து சொத்தொன்றின் தொகை உடனடியாக பதிவழிக்கப்பட வேண்டும்.

### 1.3.4 அருவகச் சொத்துக்கள்

கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருட்கள் அவை கொள்வனவு செய்யப்படுவதற்கு ஏற்பட்ட செலவினங்களினதும் குறித்த மென்பொருட்களையும் முறைமைகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் அடிப்படையிலிருந்து மூலதனமாக்கப்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட அருவகச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து திரண்ட காலக்கழிவு மற்றும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டே வெளிப்படுத்தப்படுகின்றன. இக் கிரயங்கள் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களிற்கிடையே காலக்கழிவு செய்யப்பட்டுள்ளன.

| சொத்து வகை | | வீதம் |
|---|---|---|
| கணனி மென்பொருள | 5 ஆண்டுகள் | 20% |

கணனி மென்பொருட்களைப் பேணுவதற்கான கிரயங்கள் உறப்பட்டவாறு ஓர் செலவினமாகக் கருதப்படுகின்றது.

### 1.3.5 குத்தகை காணி

குத்தகையில் உள்ள காணிகள் படிப்பெருக்க கடன்வாங்கு விகிதத்துடன் ஆரம்பத்தில் செலவிடப்பட்ட ஏதேனும் நேரடிக் கிரயங்களைக் கூட்டி குறைந்தளவு குத்தகைக் கட்டணத்தின் நிகழ்கால பெறுமதிக்குச் சமனான ஓர் தொகையில் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டு பின்னர் குத்தகைக் காணிகள் காலக்கழிவுக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. குத்தகைக் காணிகள் குத்தகைக் காலப்பகுதியில் காலக்கழிவிடப்படுகின்றன.

| சொத்து வகை | | வீதம் |
|---|---|---|
| குத்தகை காணி | 30 ஆண்டுகள் | 3.33% |

### 1.3.6 நிதியல்லாச் சொத்துக்களின் சேதம்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் அதிகாரசபை அதன் ஆதன பொறி மற்றும் இயந்திரங்களினதும் அருவகச் சொத்துக்களினதும் தொகைகளை அச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளமைக்காக ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக மீளாய்வுசெய்கின்றது. அத்தகைய ஏதேனும் அறிகுறிகள் இருப்பின் சேத இழப்பின் அளவை நிர்ணயிப்பதற்கு சொத்துக்களின் திரும்பப் பெறத்தக்க தொகை மதிப்பிடப்படுகின்றது.

நியாயக் கிரயங்களிலிருந்து விற்பனைக்கான கிரயங்களைக் கழித்து வரும் பெறுமதியையும் பயன்பாட்டுப் பெறுமதியையும் ஒப்பிடுகையிலான கூடிய பெறுமதியே திரும்பப் பெறத்தக்க

தொகையாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் பணப் பெறுமதியீட்டுக் காலத்தின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் சீராக்கப்படாத குறித்த சொத்துக்களின் இடர்களையும் பிரதிபலிக்கும் முன் வரிக் கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் மதிப்படப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் தொகையைப் பார்க்கிலும் மதிப்பிடப்பட்ட திரும்பப் பெறத்தக்க தொகை குறைவாக இருப்பின் சொத்தின் கொண்டுள்ள பெறுமதி அதன் திரும்பப் பெறத்தக்க தொகைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக சேத இழப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 நிதிச் சொத்துக்கள்

### 1.4.1 வகைப்படுத்தல்

அதிகாரசபை ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களை அவற்றின் வகைப்படுத்தலில் நிர்ணயிப்பதுடன் பின்வருமாறு அதன் நிதிச்சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

I. கடன்களும் பெறவேண்டியவைகளும்
II. விற்பனைக்காக உள்ளவை (AFS)
III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

**I. கடன்களும் பெறவேண்டியவைகளும்**

ஓர் தொழிற்படு சந்தையில் கோரப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படாத கொடுப்பனவுகளுடனான வழிவரா நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறவேண்டியவையுமாகும். இறுதி அறிக்கைக் காலத்தை அடுத்து 12 மாதங்களுக்கு மேலான முதிர்வுக்காலத்தைக் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுபவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவையும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன. அதிகாரசபையின் கடன்களும் பெறவேண்டியவையும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை, அரசாங்க பிணைகளின் மீள்கொள்வனவு, முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்குகின்றன.

**II. விற்பனைக்காக உள்ளவை (AFS)**

விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் வழிவராதவையாக ஒன்றில் இவ்வகையில் நிர்ணயிக்கப்பட்டவையாகவோ அல்லது ஏனைய வகைகளில் வகைப்படுத்தப்படாதவையாகும். முதலீடு முதிர்வடைந்தாலோ அல்லது அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் போது 12 மாதங்களிற்கிடையில் அகற்றப்படுவதற்கு முகாமைத்துவம் கருதினாலன்றி இவை நடைமுறையல்லாச் சொத்துக்களாக உள்ளடக்கப்படுகின்றன. விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் நீண்டகால பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

**III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)**

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் வழிவராத நிதிச் சொத்துக்களாகும். இவை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளாவதுடன் முதிர்வு நிர்ணயிக்கப்பட்டவையாகும். சாதகமான கருத்தையும் முதிர்வு வரை அவற்றை அதிகாரசபை வைத்திருப்பின் முதலீடுகள் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

நடைமுறை அல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் முதிர்வுக் காலப்பகுதி 12 மாதங்களுக்கு மேற்பட்டாலன்றி நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படும். இவ்வகைப்படுத்தலில் நியமிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் அதிகாரசபை தற்போது முதலீட்டைக் கொண்டுள்ளது.

### 1.4.2. ஏற்பிசைவும் ஆரம்ப அளவீடும்

கடன்கள் மற்றும் பெறவேண்டியவையாக வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் அதிகாரசபை கொடுக்கல் வாங்கலை ஆரம்பிக்கும் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏனைய நிதிச்சொத்துக்கள் நிதிக் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு ஓர் தரப்பாக அதிகாரசபை உள்ளாகும் வர்த்தகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.
ஓர் நிதிச் சொத்து அதன் நியாயப் பெறுமதி கூட்டப்பட்டு ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் நேரடியாகப் பெறப்படும் கொடுக்கல் வாங்கல் கிரயங்களில் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் பெறுவனவு உரிமைகள் முடிவடைகையில் அல்லது மாற்றப்படுகையிலும் அதிகாரசபை பாரியளவில் சகல இடர்களையும் நிதிச்சொத்துக்களின் உரிமையின் அன்பளிப்பையும் மாற்றியிருப்பின் நிதிச்சொத்துக்கள் அடையாளமிடப்படாது விடப்படுகின்றன.

**1.4.3. அடுத்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள்**

**I. கடன்களும் பெறவேண்டியவைகளும்**

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையில் சேதத்திற்கான ஏற்பாட்டை கழித்து காலக்கழிவு கிரய முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

**II. விற்பனைக்காக உள்ளவை (AFS)**

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகள் அவற்றின் நியாயப் பெறுமதி நம்பகரமான முறைமையில் நடைமுறையில் மதிப்பிடப்பட முடியாமையால் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்களாக அளவிடப்படுகின்றன.

**III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)**

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் பின்தொடர்ந்து ஆக்கபூர்வமான வட்டி முறையில் காலக்கழிவுக் கிரயத்தில் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயமானது கொடுக்கல் வாங்கல் கிரயங்களினது கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

**1.4.4 நிதிச் சொத்துக்களின் சேதம்**

**I. காலக்கழிவுக் கிரயத்தில் பேணப்படும் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் நிதிச் சொத்துக்கள் சேதமுற்றுள்ளதற்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றுகள் இருப்பின் அதிகாரசபையால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஓர் நிதிச்சொத்து நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடப்பட முடியுமாயின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கம் இருக்குமாயின் அல்லது சம்பவங்கள் அவ் இழப்பு சம்பவம் (ஓர் இழப்பு சம்பவம்) சொத்தில் ஆரம்ப அடையாளம் காணலை அடுத்து நிகழும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்தின் நடுநிலைச் சான்று இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச்சொத்து சேதமடைவதுடன் சேத இழப்புகளும் ஏற்படுகின்றன.

காலக்கழிவு கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் முதிர்வு வரையான முதலீடுகளுக்காக சொத்து கொண்டுசெல்லல் தொகைக்கும் எதிர்கால காசுப்பாய்ச்சல் மதிப்பீட்டு நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு (செலவிடப்படாத எதிர்கால கடன் இழப்புகள் தவிர) நிதிச் சொத்துக்களின் மூல தாக்கல் வட்டி விகிதத்தில் கழிக்கப்பட்டு இழப்புத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

தொடர்ந்துவரும் காலப்பகுதியின் போது சேத இழப்புகளின் தொகை குறைந்து அக்குறைவு சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து ஓர் நிகழ்விற்கு பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீட்பு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

**II. விற்பனைக்காக உள்ளவை (AFS)**

நிதிச்சொத்து சேதமடைந்தமைக்கு நடுநிலைச்சான்று உள்ளதா என்பது பற்றி அதிகாரசபை அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் மதிப்பிடுகின்றது. கோரப்படாத மூலதன முதலீடுகளுக்காக அதன் கிரயத்திலும் பார்க்க ஓர் முக்கிய அல்லது தாக்கமான வீழ்ச்சியும் சொத்துக்கள் சேதமுற்றமைக்கு சான்றாக உள்ளன. கோரப்படாத முதலீடுகளுக்கான அத்தகைய சான்று இருக்கையில் சேத இழப்பு நிதிச் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் அதே நிதிச் சொத்திற்கான மீட்பு விகித நடைமுறைச் சந்தையில் கழிவிடப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக சேத இழப்புத் தொகை அறவிடப்படுகின்றது. அத்தகைய சேத இழப்புக்கள் மீட்கப்படுவதில்லை.

**1.5 இருப்பு**

இருப்பு கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதியில் எது குறைவானதோ அப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் உள் முதல் வெளி முறையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. இருப்புகள் நுகர்வுப் பொருட்களையும் காகிதாதிகளையும் உள்ளடக்கியனவாகும்.

## 1.6 பெற வேண்டியவை

பெற வேண்டியவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (பட்டியல் பெறுமதியில்) ஏற்பிசைவு செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து ஆரம்ப பட்டியல் பெறுமதியிலிருந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் எதிர்பார்க்கபடுவதால் சேதத்திற்கான ஏற்பாடு கழிக்கப்பட்டே அளவிடப்படுகின்றது. ஆகவே நாணயப் பெறுமதிக் காலம் முக்கியமானதல்ல.

ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவிலும் அதிகாரசபை பெறவேண்டிய இழப்பு நட்டம் ஏற்பட்டுள்ளனவா என்பதற்கு நடுநிலைச் சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அதிகாரசபையின் கடந்தகாலக் கொடுப்பனவுச் சேகரிப்பு அனுபவங்களையும் தாமதக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையையும் பெறவேண்டியவற்றிற்கான இழப்பின் நடுநிலைச் சான்றுகள் உள்ளடக்குகின்றன. இழப்பின் நடுநிலைச் சான்று இருப்பின் மட்டுமே பெறவேண்டியவை இழக்கப்படுவதுடன் இழப்பு நட்டங்களும் ஏற்கப்படுகின்றன. பெறவேண்டியவை இழப்பிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

## 1.7 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசிற்குச் சமமானவைகளில் கையிலுள்ள காசு, வங்கியில் அழைப்பாக உள்ள வைப்புகள், மூன்று மாத அல்லது அதனிலும் குறைவான அடிப்படை முதிர்வைக் கொண்ட உயர் திரவத்தன்மையிலான ஏனைய குறுங்கால உயர் திரவத் தன்மையான முதலீடுகளையும் உள்ளடக்கும்.

## 1.8 பங்களிப்பு மூலதனம்

அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் கொண்டுள்ளது.

## 1.9 நிதிப் பொறுப்புகள்

அதிகாரசபை நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. அதிகாரசபையின் ஏனைய நிதிப் பொறுப்புகள் செலுத்த வேண்டியவை, அனுமதிப்பபத்திரக் கட்டண முற்பெறுவனவு, இரத்தினக்கல் பெறப்பட்ட வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புகளை உள்ளடக்கும். ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் இந்நிதிப் பொறுப்புகள் மூலப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

அதிகாரசபை நிதிப் பொறுப்பை அதன் ஒப்பந்தமயக் கடப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதும், இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது முடிவுற்றதும் ஏற்பிசைவு செய்வதில்லை.

## 1.10 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் பிற்போடப்பட்ட வரியைக் கொண்டவையாகும். ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புபட்டவற்றவை தவிர்ந்த ஏனையவை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இவ் விடயத்தில் ஏனைய விபரமான வருமானத்திலும் வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. அதிகாரசபைக்கு உரித்துடைய தொழிற்படு மற்றும் உழைக்கப்பட்ட வரி வருமானத்தில் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் வலிதான வரிச் சட்டங்களின் அடிப்படையில் நடைமுறை வரிக் கட்டணம் கணிப்பிடப்படுகின்றது. உரிய வகையில் வரி அதிகாரிகளுக்கு செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் தொகைகளின் அடிப்படையில் முகாமைத்துவம் ஏற்பாடுகளை உருவாக்குகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் அவற்றின் கொண்டுசெல்லல் பெறுமதிகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளில் பிற்போடப்பட்ட வரி நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கணக்கீடு அல்லது வரிக்குட்பட்ட இலாபநட்டங்களைத் தாக்காத கொடுக்கல்வாங்கல் வேளையில் ஓர் வியாபார பிணைப்பு அல்லாத ஓர் கொடுக்கல்வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து உருவாவதாயின் பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரி அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் நிலவும் வரி விகிதங்களில் நிர்ணயிக்கப்பட்டு பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகையில் அல்லது தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால வரியிடத்தக்க இலாபத்தின் தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தப்படக்கூடிய நிலையின் அளவிற்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நடைமுறை வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடைமுறை வரிப் பொறுப்புகள் எதிரீடு செய்யப்படுவதற்கான உரித்து சட்ட ரீதியாக இருக்குமிடத்தும் அதே வரி அதிகாரங்களால் வருமான வரி விதிப்பனவுகளுடன் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்புபடுகையிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

## 1.11 ஊழியர் நலன்கள்

### (அ) தெளிவூட்டப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பின்னைய தொழில் நலனுக்காக அதிகாரசபையால் வேறு ஓர் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஓர் நிலையான பங்களிப்புகளைச் செலுத்துவதே தெளிவாக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். அதிகாரசபை எதிர்காலப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது தொடர் கடப்பாடுகளைக் கொண்டதல்ல. பங்களிப்புகள் அவை செலுத்தப்பட வேண்டிய நிலைக்குட்படுகையிலேயே ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

அதிகாரசபை ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

### (ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்

தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம் தொடர்பாக அதிகாரசபையின் கடப்பாடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறான தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் தற்போதைய பெறுமதிக்கே உள்ளன. பணிக்கொடைச் சூத்திரத்தைப் பிரயோகித்து திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி வருடாந்தம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன. தற்போதைய மற்றும் முன்னைய காலப்பகுதியில் ஊழியர்களின் சேவைகளுக்காக அவர்களது உழைப்பின் மதிப்பிடத்தக்க எதிர்கால நலனைக் கழிப்பதன் மூலம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

எடுகோள்கள், நடைமுறைச் சேவைக் கிரயம் மற்றும் வட்டியிலான மாற்றங்களிலிருந்து உருவாகும் இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் அவை உருவாகும் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் வெளிவாரியாக நிதியீட்டப்பட்டவை அல்ல.

### (இ) குறுங்கால ஊழியர் நலன்கள்

குறுங்கால ஊழியர் நலன் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட தொடர்புபட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவிடப்படாத தொகையில் மதிப்பிடப்பட்டு அளவிடப்படுகின்றது.

## 1.12 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும்

ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும் கடந்த சம்பவமொன்றின் விளைவாக அதிகாரசபை தற்போதைய சட்ட ரீதியான அல்லது தொடர்கடப்பாடுகளை கொண்டிருக்குமாயின் பொருளாதார மூலவளத்தின் வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் அதிகாரசபையிலிருந்து தேவைப்படுமாயின் தொகைகளும் நம்பகரமான முறையில் மதிப்பிடப்படக் கூடியதாக உள்ள போது சட்டரீதியான கோரல்களுக்கும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தற்போதைய கடப்பாடுகளைத் தீர்க்கக்கூடியதற்கு தேவையான மதிப்பீட்டு செலவினத்தில் ஏற்பாடுகள் தற்போதைய கடப்பாடுகளுடன் தொடர்புபட்ட உறுதியற்ற தன்மை மற்றும் இடர்கள் உள்ளடங்கலாக, அறிக்கைத் திகதியில் நிலவும் கூடியளவில் கிடைக்கப்பெறும் நம்பத்தகுந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றன.

சகல நிகழத்தகு பொறுப்புகளும் மூலவளங்களின் ஓர் வெளிப்பாய்ச்சலுக்கான வாய்ப்பு இருந்தாலன்றி நிதிக்கூற்றுக்களில் ஓர் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

## 1.13 வருமான ஏற்பிசைவு

வருமானங்கள் பெற்ற அல்லது பெறவேண்டிய அக்கறைகளின் நியாயப் பெறுமதியிலேயே அளவிடப்பட்டு இரத்தினக்கல் அகழ்விற்கான உரிமை விற்பனை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், ஏற்றுமதி தரகு மற்றும் வழங்கப்படும் சேவைகள், குறிப்பிடப்பட்ட தேறிய பெறுமதி சேர் வரியையும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகைகளில் அறவிடப்பட வேண்டிய தொகைகளைப்

பிரதிநிதித்துவம் செய்கின்றது. வருமானமானது நம்பகமான முறையில் அளவிடப்பட்டு அதிகாரசபைக்கு எதிர்கால பொருளாதார நலன்கள் கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்பு இருக்குமாயின் அதிகாரசபையில் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அடையாளங்காணப்படக் கூடிய ஒவ்வொரு வகைகளிலான பாரியளவில் வழங்கப்படும் சேவைகளுக்குகாக அதிகாரசபை பின்வரும் வருமான ஏற்பிசைவு செய்யப்பட்ட வகைப்படுத்தலைப் பிரயோகிக்கின்றது.

**(அ) இரத்தினக்கல் அகழ்வு உரிமைகளின் விற்பனை (காணி ஏலவிற்பனை)**
ஒதுக்கப்பட்ட காணித் துண்டுகளில் இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக அறவிடப்படும் கோரப்பட்ட விலையே இரத்தினக்கல் அகழ்வு உரிமைகளின் விற்பனையாகும். இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர வழங்கல் வேளையிலேயே வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம் - வாடிக்கையாளர்கள் மற்றும் அகழ்வாளர் அனுமதிப்பத்திரம்**
அனுமதிப்பத்திரக் கட்டணம் வாழ்வுக் காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம் - பக்கோ மற்றும் இரத்தினக்கல் ஏலவிற்பனை அனுமதிப்பத்திரம்**
இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர வழங்கல் வேளையில் அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஈ) இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி தரகுப்பணம் (ஏற்றுமதி சேவைக் கட்டணம் மற்றும் கட்டுநாயக்க வைர நிலைய சேவைக் கட்டணம்)**
ஏற்றுமதிக்காக பொருட்கள் ஆயத்தமான வேளையில் ஏற்றுமதித் தரகுப் பணம் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(உ) சேவைகள்**
கள ஆய்விலிருந்தான வருமானக் கொடுப்பனவுகளின் பட்டியலிடுகையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**(ஊ) வாடகை வருமானம்**
குத்தகைக் காலப்பகுதியின் போது அட்டுறு அடிப்படையில் வாடகை வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(எ) வட்டி வருமானம்**
செயற்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஏ) பங்கிலாப வருமானம்**
கொடுப்பனவின் பெறுவனவு உரிமை ஆரம்பித்ததும் பங்கிலாப வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஐ) ஆதன, பொறி உபகரணங்கள் மீதான இலாபமும் நட்டங்களும்**
கொண்டு செல்லல் தொகையுடன் விற்பனை வருமானத்தை ஒப்பிட்டு கைதவிர்ப்புகளின் இலாப நட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**1.14 செலவினங்கள்**
அறிக்கைக் காலப்பகுதிக்கான இலாபத்தை ஈட்டுவதற்கான வருமானமாக தொழிற்பாட்டில் ஏற்கப்படும் சகல ஏனைய செலவினங்களுமாகும்.

**1.15 அறிக்கைக் காலப்பகுதியை அடுத்துள்ள சம்பவங்கள்**
அறிக்கைக் காலப்பகுதியின் பின்னரான சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு உரியவாறு சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களின் குறித்த குறிப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.16 கடப்பாடுகள்**
அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் சகல பொருண்மையான கடப்பாடுகளும் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளால் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

**1.17 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்**

சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடுகள் மற்றும் ஏற்பிசைவு பற்றிய சில நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், முகாமைத்துவ தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது.

I நிதிக்கூற்றுக்கள் மீதான பாரிய தாக்கத்தை விளைவிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கையில் பின்வருபவை பாரிய தீர்மானங்களாகும்.

**(அ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் ஏற்பிசைவு**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் ஏற்பிசைவு செய்யப்படும் அளவானது பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக உள்ள எதிர்கால வரியிடத்தக்க வருமான நிகழ்விற்கு அமைய ஓர் மதிப்பீட்டின் அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

II சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடு மற்றும் செலவின அளவீடு மற்றும் ஏற்பிசைவு மீதான பாரிய தாக்கத்துடனான மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பற்றிய தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**(அ) பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலம்**

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலத்தில் அதன் மதிப்பீட்டை முகாமைத்துவம் மீளாய்வு செய்கின்றது. தகவல் தொழிநுட்ப உபகரணம் மற்றும் சில மென்பொருளின் பயன்பாட்டை மாற்றத்தக்க தொழிநுட்ப வழக்கிழப்புடன் இம் மீதிகளின் நிலையில்லா தன்மைகள் தொடர்புபட்டன.

**(ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்**

சில எடுகோள்களைப் பயன்படுத்தி கடன் அடிப்படைச் செயற்திட்ட அலகு மீது நிர்ணயிக்கப்பட்ட சில காரணிகளை தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் நடைமுறைப் பெறுமதி சார்ந்துள்ளது. கழிவு விகிதம் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்திற்கான கடப்பாடுகள் மற்றும் தேறிய கிரயத்தை நிர்ணயிக்கையில் எடுகோள்கள் குறிப்பு 22.1 இவ் வெளியிடப்பட்டுள்ளது.

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றக் கூற்று

| | பங்களிப்பு மூலதனம் | இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | ஆபரண அபிவிருத்தி நிதியம் | இரத்தினக்கல் பரிசூதிய நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்தப்பட்ட வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **27,356,498** | **17,455,083** | **29,499,189** | **-** | **-** | **58,145,425** | **193,355,884** | **355,812,079** |
| நியாயப் பெறுமதிச் சீராக்கம் | | | | | | 355,074,648 | - | - | 355,074,648 |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | - | - | - | - | - | - | 185,117,560 | 185,117,560 |
| **ஏனைய விபரமான வருமானம்** | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | **896,004,287** |
| **ஆண்டிற்கான பங்களிப்பு/(பயன்பாடு)** | - | (129,000) | 6,202,398 | 3,803,702 | - | - | - | - | 9,877,100 |
| சேதத்திற்கான சீராக்கம் | | | | | | | (5,200,000) | 5,200,000 | - |
| **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **27,227,498** | **23,657,481** | **33,302,891** | **-** | **355,074,648** | **52,945,425** | **383,673,444** | **905,881,387** |
| **நியாயப் பெறுமதி சீராக்கம்** | - | - | - | - | - | - | - | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | - | - | - | - | - | - | 59,162,844 | 59,162,844 |
| **ஏனைய விபரமான வருமானம்** | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | **965,044,231** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | | | | | | | (2,680,868) | (2,680,868) |
| **ஆண்டிற்கான பங்களிப்பு/(பயன்பாடு)** | - | (300,000) | 5,401,782 | 3,208,559 | - | - | - | - | 8,310,341 |
| சேதத்திற்கான சீராக்கம் | - | - | - | - | - | - | - | - | - |
| **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **26,927,498** | **29,059,263** | **36,511,450** | **-** | **355,074,648** | **52,945,425** | **440,155,420** | **970,673,703** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| 3 | ஆதன, பொறி, உபகரணங்கள் கிரயம் | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு | சேர்ப்பனவுகள் | அகற்றல்கள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|---|
| | **இறையிலாதனம்** | | | | |
| | காணி | 37,941,670 | - | - | 37,941,670 |
| | கட்டிடங்கள் | 153,108,406 | 291,861 | - | 153,400,267 |
| | தளபட பொருத்திகள் | 12,594,781 | 770,600 | - | 13,365,381 |
| | தளபாடங்கள் | 10,837,820 | 453,325 | (32,325) | 11,258,820 |
| | அலுவலக உபகரணங்கள் | 13,777,267 | 1,239,629 | (449,500) | 14,567,396 |
| | கணனி | 17,728,446 | 2,007,450 | (391,683) | 19,344,213 |
| | ஆய்வுகூட உபகரணங்கள் | 18,315,510 | 2,340,989 | (70,100) | 20,586,399 |
| | பட்டை தீட்டும் உபகரணங்கள் | 403,475 | - | - | 403,475 |
| | ஆபரண உபகரணங்கள் | 148,200 | - | - | 148,200 |
| | மதிப்பீட்டு உபகரணங்கள் | 20,264,522 | 5,037,149 | - | 25,301,671 |
| | இயந்திரங்கள் மற்றும் கெஉடா உபகரணங்கள் | 8,292,358 | - | - | 8,292,358 |
| | மோட்டார் வாகனங்கள் | 54,172,088 | 29,072,500 | - | 83,244,588 |
| | மோட்டார் சைக்கிள் | 100,000 | - | - | 100,000 |
| | துவிச்சக்கரம் | 37,334 | - | - | 37,334 |
| | நூலகப் புத்தகங்கள் | 6,900 | - | - | 6,900 |
| | ***குத்தகை ஆதனம்*** | | | | |
| | காணி | 159,205 | - | - | 159,205 |
| | | **347,887,982** | **41,213,503** | **(943,608)** | **388,157,877** |

| | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு | ஆண்டிற்கான வதிப்பனவுகள் | (அகற்றல்கள்) | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **பெறுமானத்தேய்வு** | | | | |
| **இறையிலாதனம்** | | | | |
| கட்டிடங்கள் | 32,320,002 | 3,995,403 | - | 36,315,405 |
| தளபட பொருத்திகள் | 10,302,304 | 830,033 | - | 11,132,337 |
| தளபாடங்கள் | 7,209,353 | 895,211 | (32,325) | 8,072,239 |
| அலுவலக உபகரணங்கள் | 6,740,281 | 1,185,540 | (127,191) | 7,798,630 |
| கணனி | 11,272,039 | 2,052,982 | (391,683) | 12,933,338 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 8,330,784 | 1,695,027 | (70,100) | 9,955,711 |
| பட்டை தீட்டும் உபகரணங்கள் | 247,515 | 32,200 | - | 279,715 |
| ஆபரண உபகரணங்கள் | 166,154 | - | (17,954) | 148,200 |
| மதிப்பீட்டு உபகரணங்கள் | 14,741,566 | 1,454,862 | - | 16,196,428 |
| இயந்திரங்கள் மற்றும் கெஉடா உபகரணங்கள் | 8,170,011 | 105,855 | - | 8,275,866 |
| மோட்டார் வாகனங்கள் | (470,793) | 12,986,015 | 31,771,320 | 44,286,542 |
| மோட்டார் சைக்கிள் | 75,000 | 25,000 | - | 100,000 |
| துவிச்சக்கரம் | 33,579 | 936 | - | 34,515 |
| நூலகப் புத்தகங்கள் | - | - | - | - |
| | **99,137,795** | **25,259,064** | **31,132,067** | **155,528,926** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| தேறிய கொண்டு செல்லல் பெறுமதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2012 சனவரி 01 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| ***இறையிலாதனம்*** | | | |
| காணி | 37,941,670 | 37,941,670 | 38,091,150 |
| கட்டிடங்கள் | 117,084,862 | 120,788,404 | 121,472,936 |
| தளபட பொருத்திகள் | 2,233,044 | 2,292,477 | 2,880,032 |
| தளபாடங்கள் | 3,186,581 | 3,628,467 | 4,601,836 |
| அலுவலக உபகரணங்கள் | 6,768,767 | 7,036,986 | 5,198,862 |
| கணனி | 6,410,875 | 6,456,407 | 5,867,971 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 10,630,688 | 9,984,726 | 3,330,898 |
| பட்டை தீட்டும் உபகரணங்கள் | 123,760 | 155,960 | 188,160 |
| ஆபரண உபகரணங்கள் | - | (17,955) | (17,955) |
| மதிப்பீட்டு உபகரணங்கள் | 9,105,243 | 5,522,956 | 5,911,173 |
| இயந்திரங்கள் மற்றும் கெவுடா உபகரணங்கள் | 16,492 | 122,347 | 805,383 |
| மோட்டார் வாகனங்கள் | 38,958,045 | 54,642,881 | 13,703,672 |
| மோட்டார் சைக்கிள் | - | 25,000 | 50,000 |
| துவிச்சக்கரம் | 2,819 | 3,755 | 4,691 |
| நூலகப் புத்தகங்கள் | 6,900 | 6,900 | 6,900 |
| ***குத்தகை ஆதனம்*** | | | |
| காணி | 159,205 | 159,205 | 159,205 |
| | **232,628,951** | **248,750,186** | **202,254,914** |
| சேததத்திற்கான ஏற்பாடு | (4,887,690) | (2,934,756) | |
| | **227,741,261** | **245,815,430** | **202,254,914** |

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வெளிப்படுத்தலின் கீழ் மீள் விற்பனைப் பெறுமதி அல்லாத காரணத்தால் எஹலியகொடவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் நியாயப் பெறுமதி சேததத்திற்கான ஏற்பாட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 4 காணியின் பயன்பாட்டு உரிமையின் கொண்டுசெல்லும் பெறுமதி

| | 2013 | 2012 |
|---|---|---|
| **மூலதனமாக்கப்பட்ட தொகை** | | |
| **சனவரி 01 இல் உள்ளவாறு** | **70,909** | **70,909** |
| ஏற்கப்பட்ட ஆரம்ப கிரயம் | - | - |
| ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டவை | - | 70,909 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **70,909** | **70,909** |
| **காலக்கழிவு** | | |
| **சனவரி 01 இல் உள்ளவாறு** | **37,818** | **35,455** |
| ஆண்டின் போது காலக்கழிவு | 2,364 | 2,364 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **40,182** | **37,818** |
| **கொண்டுசெல்லும் பெறுமதி** | **30,727** | **33,091** |

காணியின் குத்தகை உரிமை 30 ஆண்டுகளுக்காக 1997 நவம்பர் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாற்றற் காலப்பகுதியில் (2011 சனவரி 01) ஏற்பிசைவு செய்யப்பட்ட காணிப் பயன்பாட்டு உரிமை 2026 நவம்பர் வரையுள்ள குத்தகைக் காலப்பகுதிக்கு காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது.

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| 5 | அருவகச் சொத்துக்கள் | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு | சேர்ப்பனவுகள்/ அகற்றல்கள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| 5.1 | **கிரயத்தில்** | | | |
| | கணனி மென்பொருள் | 2,530,056 | | 2,530,056 |
| | **மொத்தம்** | **2,530,056** | **-** | **2,530,056** |

| | | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு | ஆண்டிற்கான விதிப்பனவுகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| 5.2 | **காலக்கழிவு** | | | |
| | கணனி மென்பொருள் | 2,172,265 | - | 1,963,389 |
| | **மொத்தம்** | **2,172,265** | **-** | **1,963,389** |

| 5.3 | தேறிய கொண்டுசெல்லும் பெறுமதி | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|
| | கணனி மென்பொருள் | **357,792** | **566,667** |

| 6 | பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் /(பொறுப்புகள்) | 2013 | 2012 |
|---|---|---|---|
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **(16,062,221)** | **7,011,667** |
| | சீராக்கம் | (2,230,123) | (23,073,888) |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **(18,292,344)** | **(16,062,221)** |

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| 7 | **ஏனைய சொத்துக்கள்** | | |
| | பட்டை தீட்டப்படாத கற்களும் செயற்கைச் சேர்மக் கற்கள் | 96,683 | 96,683 |
| | இரத்தினக்கல் கண்காட்சி | 371,842,648 | 371,842,648 |
| | இரத்தினக்கற் முற்பணக் கொடுப்பனவு மற்றும் இரத்தினக்கல் நிறுவகம் | 200,000 | 200,000 |
| | | **372,139,331** | **372,139,331** |
| | சேதங்களுக்கான ஏற்பாடு | (200,000) | (200,000) |
| | | **371,939,331** | **371,939,331** |

## 8 விற்பனைக்காக உள்ளவை (AFS)

| | | | |
|---|---|---|---|
| பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள் | (குறிப்பு 8.1) | **1,200,000** | **1,200,000** |

| | *பங்குகளின் எண்ணிக்கை* | | |
|---|---|---|---|
| **8.1 பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள்** | | | |
| வரையறுக்கப்பட்ட அஸோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் | 20,000 | 200,000 | 200,000 |
| வரையறுக்கப்பட்ட ஜீ.எஸ்.எம்.பீ. டெக்னிகல் சேவிசஸ் (தனி) | 100,000 | 1,000,000 | 1,000,000 |
| | | **1,200,000** | **1,200,000** |

## 9 இருப்புகள்

| | | |
|---|---|---|
| நுகர்வு இருப்புகள் | 1,360,639 | 719,192 |
| இரத்தினக்கற்கள் - கெஉடா நிலையம் | 183,548 | 183,548 |
| அச்சீட்டு மற்றும் காகிதாதிகளின் இருப்பு | 616,218 | 796,861 |
| | **2,160,405** | **1,699,601** |

## 10 பெறவேண்டியவைகள்

| | | |
|---|---|---|
| பெறவேண்டியவைகள் | 9,512,985 | 13,566,541 |
| சேதங்களுக்கான ஏற்பாடு | (1,407,972) | (1,407,972) |
| | **8,105,013** | **12,158,569** |
| ஏனையவைகள் | 1,291,121 | 152,216 |
| | **9,396,134** | **12,310,785** |

## 11 முதிர்வு வரையுள்ள முதலீடுகள் (எச்ரீஎம்) காலக் கிரயத்திலுள்ள கொண்டுசெல்லும் தொகை

| | | |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **216,381,558** | **191,609,933** |

## 12 வைப்புகளும் முற்பணங்களும்

| | | |
|---|---|---|
| பொது வைப்புகளும் வைப்புகளும் | 32,143,890 | 299,750 |
| ஏனையவை | 19,525 | 2,401,790 |
| வாடகை வைப்புகள் | - | 7,296,233 |
| 40% காணி ஏலவிற்பனை | - | 22,090,642 |
| பாதுகாப்பு வைப்புகள் | 54,500 | 54,500 |
| விநியோகத்தர்களின் முற்பணம் | 1,925,552 | 981,984 |
| | **34,143,467** | **33,124,899** |
| சேதங்களுக்கான ஏற்பாடு | (1,433,947) | (1,433,947) |
| | **32,709,520** | **31,690,952** |

| | | | |
|---|---|---|---|
| **13** | **ஊழியர் கடன்களும் முற்பணங்களும்** | | |
| | முற்பணங்கள் | 80,496 | 146,641 |
| | மரணிப்புக் கடனுக்கான நலன்புரிக் கடன்கள் | - | - |
| | கொடுப்பனவற்ற லீவுகள் | 169,332 | 232,259 |
| | வாகனக் கடன் | 400,171 | 728,260 |
| | கடன்கள் | - | 5,955 |
| | புடவைக் கடன் | 186,522 | 252,556 |
| | இடர் கடன்கள் | 12,823,229 | 12,384,206 |
| | | **13,659,749** | **13,749,877** |

| | | | |
|---|---|---|---|
| **14** | **ஏனைய நிதிச் சொத்துக்கள்** | | |
| | நிலையான வைப்புக்கள் | 625,854,003 | 541,699,421 |
| | அரச ஈட்டு முதலீட்டு வங்கியிலான வைப்புகள் (ஊழியர் வீடமைப்புக் கடனுக்கானது) | - | - |
| | அரச நிறுவகங்களின் தற்காலிக மிகை நிதியம் | 13,522,485 | 3,006,884 |
| | | **639,376,488** | **544,706,305** |

| | | | |
|---|---|---|---|
| **15** | **காசும் காசுக்குச் சமமானவையும்** | | |
| | காசும் வங்கி மீதியும் - இல. ரூபா | 55,692,429 | 19,355,133 |
| | வங்கி மீதிகள் - வெளிநாட்டு நாணயம் | 37,119 | 3,659,811 |
| | சில்லறைக் காசு | - | - |
| | ரிப்போவில் முதலீடுகள் | 42,234,847 | 25,362,854 |
| | | **97,964,396** | **48,377,798** |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

**16 பங்களிப்பு மூலதனம்**

அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் கொண்டுள்ளது.

**17 இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம்**

1993 இன் 50 ஆம் இலக்க இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி I 14 (என்) இன் பிரகாரம் இரத்தினக்கல் கைத்தொழிலில் தொழில் புரியும் ஊழியர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும் படி குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2008 வரை இரத்தினக்கல் அகழ்வாளர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டிருந்தது.

**18 ஆபரண அபிவிருத்தி நிதியம்**

ஆபரணக் கைத்தொழிலில் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக 2007 பாதீட்டுப் பரிந்துரைப்பிற்கமைய ஆபரணத் தயாரிப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் ரூபா 5000 வருடாந்தப் பதிவுக் கட்டணத்தை இது குறிக்கின்றது.

**19 இரத்தினக்கல் பரிசூதிய நிதியம்**

1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் , ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி IV 52 இன் தேவைப்பாட்டிற்கமைய தண்டப்பண நிதியத்திற்கு சட்ட மீறல்களுக்காக குறித்த தரப்பினரிடமிருந்து விதிக்கப்படும்

தண்டப்பணத்தை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. சபைச் சுற்றறிக்கை 824 இன் அறிவுறுத்தல்களுக்கு அமைய தண்டப்பண நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. சுற்றிவளைப்புக் குழுவிற்கு வெகுமதிகளை வழங்குவதற்காக இந் நிதியம் பேணப்படுகின்றது.

**20 இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

கண்காட்சியில் பயன்படுத்தப்பட்ட இரத்தினக்கற்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**21 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

காணி கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் குறிக்கின்றது. குறித்த மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் கைதவிர்க்கப்படுகையில் மீள் மதிப்பீட்டு மிகையின் பகுதி பகிரப்படாத உழைப்பிற்கு மாற்றப்படுகின்றது.

**22 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்**

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | | **18,607,015** | **29,571,319** |
| விபரமானவருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள் | குறிப்பு 22.1 | **8,115,151** | (115,661) |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட நலன்கள் 2013 | | (2,726,309) | (10,848,643) |
| 2013 ஆண்டிற்கான சீராக்கங்கள் | | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | **23,995,857** | **18,607,015** |

**22.1 விபரமானவருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| வட்டி கிரயம் | 1,979,786 | 3,548,558 |
| ஆண்டிற்கான கட்டணம் | 1,107,708 | 756,216 |
| எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து உருவாகும் (இலாபம்) / நட்டம் | 5,027,657 | (4,420,436) |
| | **8,115,151** | **(115,661)** |

ஓய்வூதிய நலக் கடப்பாடுகளை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டு மாறிகளை அடிப்படையாகக் கொண்டு இவ் எடுகோள்கள் அதிகாரசபையால் விஸ்தரிக்கப்பட்டவையாகும்.

**பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்கள் பின்வருமாறாகும்.**

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் [%] | 11 | 12 |
| எதிர்கால சம்பள உயர்வுகள் சராசரி – சம்பளம் [%] | 1.3 | 1.3 |
| பதவியணி புரள்வுக் காரணி [%] | 2.5 | 7.2 |
| ஓய்வு பெறும் வயது [ஆண்டுகள்] | 60 | 60 |

நீண்ட தவணை அரசாங்க முறிகளின் சந்தை விகிதத்தின் அடிப்படையில் கழிவு வீதம் நிர்ணயிக்கப்படுகின்றது.

**23 குத்ததைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு**

**மொத்தப் பொறுப்பு**

| | | |
|---|---|---|
| **சனவரி 01 இல் உள்ளவாறு** | **599,564** | **625,889** |
| ஆண்டின் போது இனங்காணப்பட்டவை | - | - |
| ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (26,325) | (26,325) |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **573,239** | **599,564** |

**நிதிக் கிரயம்**

| | | |
|---|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறு | **583,829** | **608,019** |
| ஆண்டின் போது இனங்காணப்பட்டவை | **-** | **-** |
| ஆண்டின் போது பரந்த வருமானத்தில் இனங்காணப்பட்ட நிதிக் கிரயம் | (24,500) | (24,190) |
| **எதிர்வரும் காலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்** | **559,329** | **583,829** |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது தேறிய பொறுப்பு** | **(13,910)** | **15,735** |

**23.1 பொறுப்புகளின் வகைப்படுத்தல்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| **ஒரு வருடத்திற்குள் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| மொத்தப் பொறுப்பு | 26,995 | 26,995 |
| எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | (24,765) | (24,500) |
| | **2,230** | **2,495** |
| **ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| **இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| மொத்தப் பொறுப்பு | 131,625 | 118,463 |
| எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | (126,444) | (112,970) |
| | **5,181** | **5,493** |
| **ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| மொத்தப் பொறுப்பு | 414,619 | 454,106 |
| எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | (408,120) | (446,358) |
| | **6,499** | **7,748** |
| **ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான மொத்த தீர்வுகள்** | **11,680** | **13,241** |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த தேறிய பொறுப்பு** | **13,910** | **15,736** |

**24 செலுத்த வேண்டியவைகள்**

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் | 62,031,660 | - |
| ஒப்பந்தக்காரர்களிடமிருந்தான பிடிமானப்பணம் | 2,568,873 | 2,568,873 |
| காணிகளின் உரிமையாளர்களுக்கும்கும் காணி மீளமைப்பு ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய காணி ஏலவிற்பனையிலிருந்தான 40% விற்பனை வருமானங்கள் | - | 35,152,480 |
| ஏனையவை | 115,325 | 451,451 |
| | **64,715,858** | **38,172,804** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| 25 | **பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும்** | | |
| | முற்பணப் பற்றுச்சீட்டுக்கள் | 1,668,387 | 1,054,223 |
| | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 15,243,550 | 14,591,919 |
| | ஊழியர்களின் பிணை வைப்புகள் | 114,500 | 69,500 |
| | நுகர்வோரிடமிருந்தான முற்பணம் | 15,896 | 15,896 |
| | ஊழியர்களிடமிருந்தான மிகை அறவீடுகள் | 3,066 | 6,258 |
| | காணிப் பிணக்கு வைப்புகள் | 53,378,475 | 44,863,550 |
| | கேள்வி வைப்புகள் | 14,103,500 | 2,880,500 |
| | உலக வர்த்தக மையத்திலுள்ள கடை உரித்திற்கான வைப்பு | 11,474,385 | 8,396,463 |
| | மருத்துவத் திட்ட நிதியம் | 280,000 | 280,000 |
| | ஏற்றுமதி தரகு வைப்புகள் | 125,997 | 125,997 |
| | ஏனையவை | 45,000 | - |
| | | **96,452,755** | **72,284,306** |
| 26 | **செலுத்த வேண்டிய நியிச் சட்டக் கொடுப்பனவுகள்** | | |
| | கூட்டிணைந்த வரி | 60,105,954 | 137,395,277 |
| | பெறுமதி சேர் வரி | 8,736,530 | 3,838,508 |
| | பிடித்து வைத்தல் வரி | (3,017,710) | - |
| | 2.5% பிடித்து வைத்த இரத்தினக்கல் ஏலவிற்பனை வரி | 22,633,413 | 23,137,224 |
| | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 1,782,649 | 632,041 |
| | முத்திரைக் கட்டணங்கள் | 2,432,636 | 1,397,995 |
| | உழைக்கும் போதே செலுத்தும் வரி | (35,085) | 61,177 |
| | | **92,638,388** | **166,462,222** |
| 26.1 | **கூட்டிணைந்த வரி** | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **1,414,921** | **1,781,603** |
| | ஆண்டிற்கான நடைமுறை வரி | 58,691,033 | 142,736,852 |
| | ஆண்டின் போதான கொடுப்பனவு | - | (1,781,603) |
| | - கடந்த ஆண்டுப் பொறுப்பின் தீர்ப்பனவு | - | (2,000,000) |
| | - சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவு | - | (3,325,782) |
| | வரிக் கடன்களுடன் பதிவழிக்கப்பட்டவை | | |
| | - ஈஎஸ்சி | - | (15,793) |
| | - பிடித்து வைத்தல் வரி | - | - |
| | - பெயரளவு வரி | - | - |
| | கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டின் சீராக்கம் | - | - |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **60,105,954** | **137,395,277** |
| 27 | **ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும்** | | |
| | சட்டக் கோரல்களுக்கான ஏற்பாடு | 195,300 | 195,300 |
| | அட்டுறு செலவினங்கள் | 19,265,460 | 20,469,928 |
| | | **19,460,760** | **20,665,228** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| 28 | **வருமானம்** | | |
| | காணி ஏலவிற்பனை – அரச காணி | 7,672,714 | - |
| | காணி ஏலவிற்பனை – எல்ஆர்சீ | 15,114,475 | 275,388,480 |
| | சேவை மற்றும் மேன்முறையீட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் | 763,440 | 829,450 |
| | இரத்தினக் கல் அகழ்வு அனுமதிப்பத்திரக் கட்டணம் | 37,148,274 | 31,176,659 |
| | விற்பனையாளர் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 30,364,822 | 24,667,610 |
| | அன்பளிப்புகள் மற்றும் மாதிரிகளுக்கான சேவைக் கட்டணம் | 222,000 | 283,078 |
| | இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதி சேவைக் கட்டணம் | 96,606,783 | 95,763,490 |
| | பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 207,800 | 223,290 |
| | சேவை கட்டணங்கள் - கெவுடா ஏற்றுமதி | 3,438,550 | 982,807 |
| | எல்டீஓ காணி / கனியவள வரி | 4,621,500 | 4,663,800 |
| | தண்டப் பணத்திலிருந்தான வருமானம் | 11,862,249 | 13,430,708 |
| | இரத்தினக் கல் ஏலவிற்பனை உரிமை ஆவணம் | 638,200 | 380,200 |
| | இரத்தினக் கல் பரிசோதனைக் கட்டணம் | 7,310,998 | 5,592,666 |
| | மதிப்பீட்டு அலுவலகத்திலிருந்தான வருமானம் | 4,014,743 | 4,506,246 |
| | அனுமதிப்பத்திரப் பிரதிக் கட்டணம் | 98,200 | 160,500 |
| | சேவைக் கட்டணம் - கட்டுநாயக்க வைர நிலையம் | 10,224,552 | 13,245,734 |
| | இரத்தினக்கல் பொதி அகற்றலிலிருந்தான வருமானம் | 1,410,000 | 1,054,735 |
| | வெளிநாட்டு நாணய ஏற்பு உரிமை ஆவணம் | 293,321 | 301,925 |
| | சுற்றாடல் பாதுகாப்பு | (452,407) | 335,000 |
| | பெக்கோ சேவைக் கட்டணம் | 25,185,500 | 15,906,100 |
| | பரிசோதிப்புக் கட்டணம் | 67,172,600 | 31,170,875 |
| | நிற மற்றும் 3 டீ அட்டைகள் | 1,977,287 | 1,256,018 |
| | இரத்தினக் கல் விற்பனை | 39,697,648 | 3,644,185 |
| | இரத்தினக்கல் அகழ்வு விற்பனை | 5,102,250 | 5,245,000 |
| | | **370,695,500** | **530,208,556** |
| 29. | **ஏனைய வருமானம்** | | |
| | நானாவித வருமானம் | 1,664,792 | 3,887,098 |
| | உலக வர்த்தக மைய மற்றும் இரத்தினபுரி விற்பனைக் கூடங்கள் | 20,385,819 | 17,868,620 |
| | புத்தக விற்பனைகள் | (1,925) | (1,551) |
| | பங்கிலாபங்கள் | 1,351,171 | 838,432 |
| | வாடகை வருமானம் | 1,194,579 | 221,000 |
| | ஏலவிற்பனைப் பொருட்களிலிருந்தான வருமானம் | 1,409,522 | 19,003 |
| | நிலையான சொத்துக் கைதவிர்ப்பிவிருந்தான இலாபம் | 103,034 | 10,976,843 |
| | காப்புறுதி முகவர்களிடமிருந்தான வருமானம் | 342,866 | 267,009 |
| | ஆபரண விற்பனை | 183,412 | 114,975 |
| | வழமையான அங்கத்துவக் கட்டணம் - உலக வர்த்தக மையம் | 96,906 | - |
| | | **26,730,178** | **34,191,429** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

### 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| 30 | **நிர்வாகச் செலவினங்கள்** | | |
| | சந்தாக்கட்டணம் | 290,748 | 814,385 |
| | உபசாரிப்பு (உள்ளூர்) | 486,853 | 512,225 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | 4,208,361 | 4,926,368 |
| | அஞ்சல் மற்றும் முத்திரைகள் | 992,058 | 814,552 |
| | இணையதளக் கட்டணங்கள் | 247,427 | 233,906 |
| | டெலெக்ஸ் மற்றும் பக்ஸ் கட்டணங்கள் | 74,921 | 71,531 |
| | சபை அங்கத்தவர்களின் செலவினங்கள் | 620,905 | 468,750 |
| | வாடகை | 3,520,511 | 2,480,539 |
| | மின்சாரம் | 9,397,814 | 8,066,464 |
| | இறைகளும் வரிகளும் | 919,390 | 927,157 |
| | பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | 92,016 | 120,140 |
| | நீர் வரி மற்றும் கட்டணங்கள் | 957,329 | 859,783 |
| | விளம்பரம் | 853,070 | 255,263 |
| | போக்குவரத்து | 104,214 | 194,995 |
| | காப்புறுதி | 2,370,246 | 2,082,460 |
| | சட்டக் கட்டணங்கள் | 3,668,733 | 606,339 |
| | ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்கள் | 500,000 | 354,000 |
| | முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வுக் கட்டண மிகை ஏற்பாடு | - | - |
| | அளவைக் கட்டணங்கள் | 370,002 | 59,500 |
| | முகாமைத்துவ ஆலோசனை | 412,100 | 50,170 |
| | கட்டிடப் பராமரிப்பு | 4,246,674 | 3,784,346 |
| | உபகரணப் பராமரிப்பு | 1,909,240 | 1,380,407 |
| | பாதுகாப்புச் சேவைகள் | 2,459,209 | 2,568,134 |
| | கருத்தரங்குகளும் பயிற்சியும்(உள்ளூர் ) | 912,422 | 701,727 |
| | திடீர் சுற்றிவளைப்புச் செலவினங்கள் | 328,977 | 536,628 |
| | பொது ஏலவிற்பனைச் செலவினங்கள் | 3,056,022 | 9,398,295 |
| | அன்பளிப்புகள் | 1,977,800 | 2,657,000 |
| | நுகர்வுச் சொத்துக்கள் | 350,225 | 68,025 |
| | அலுவலக வழங்கல்கள் | 1,530,931 | 2,148,232 |
| | காணிப் பயன்பாட்டு உரிமையின் காலக்கழிவு | 2,364 | 2,364 |
| | அச்சீடு மற்றும் காகிதாதிகள் | 3,146,415 | 2,126,749 |
| | ஆய்வுகூட வழங்கல்கள் | 800,927 | 85,000 |
| | சுற்றாடற் செலவினங்கள் | 7,183,612 | 1,277,517 |
| | பெறுமானத்தேய்வு | 25,259,064 | 13,093,088 |
| | அருவகச் சொத்துக்களின் காலக்கழிவு | 208,875 | 376,375 |
| | உலக வர்த்தக மையத்தின் வாடகை | 15,844,811 | 14,482,199 |
| | உலக வர்த்தக மையத்திற்குச் செலுத்தப்பட்ட மின்சாரம் | 1,430,385 | 1,576,366 |
| | உலக வர்த்தக மையத்தின் சட்டக் கட்டணங்கள் | (137,379) | - |
| | 40 ஆவது நினைவாண்டிற்கான செலவினம் | - | - |
| | மோட்டார் வாகனப் பராமரிப்பு | 4,213,686 | 2,001,638 |
| | எண்ணெயும் எரிபொருளும் | 8,532,071 | 7,066,448 |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | டயர்களும் டியூப்களும் | 1,254,082 | 587,342 |
| | மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும் | 1,316,336 | 1,765,808 |
| | வாகனத்தரிப்புக் கட்டணங்கள் | 1,425 | 33,000 |
| | வாகனக் காப்புறுதி நட்டஈடு | (455,201) | (183,060) |
| | பொதுச் செலவினங்கள் | 300,415 | 56,836 |
| | செயற்திட்டச் செலவினங்கள் | 3,014,321 | 1,053,597 |
| | வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் இழப்பிற்கான ஏற்பாடு | - | 76,500 |
| | சட்டக் கோரல்களுக்கான ஏற்பாடு | 3,400,000 | 195,300 |
| | வங்கிக் கட்டணங்கள் | 224,869 | 228,070 |
| | இரத்தினக்கல் காணிப் புனரமைப்புச் செலவினங்கள் | - | - |
| | கோரப்படாத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 823,428 | 818,324 |
| | அறவிடமுடியாக் கடன்கள் | 1,404,560 | - |
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் சேதத்திற்கான ஏற்பாடு | 1,952,934 | 2,934,756 |
| | பதிவழிக்கப்பட்ட/(உள்ளடக்கப்பட்ட) கணக்குகள் | - | (100,988) |
| | | **126,580,200** | **96,694,548** |
| **31** | **ஆளணிச் செலவுகள்** | | |
| | சம்பளங்களும் படிப்பணமும் | 66,368,517 | 64,184,692 |
| | பதில் படிப்பணங்கள் / இடர் படிப்பணங்கள் | 505,234 | 657,002 |
| | ஊ.சே.நி. இற்கு உள்ளடங்காத சம்பளங்கள் | 8,873,808 | 8,916,922 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 11,091,742 | 10,476,487 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 2,134,731 | 2,052,685 |
| | மேலதிக நேரக் கொடுப்பனவு | 3,530,029 | 2,800,118 |
| | லீவு நாட்களில் வேலை செய்தமைக்கான கொடுப்பனவு | 179,213 | 429,628 |
| | பரிசளிப்பு (தங்கப் பதக்கம்) | - | 399,065 |
| | லீவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 3,907,869 | 3,821,351 |
| | ஊழியர் வீடமைப்புக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 693,826 | 339,988 |
| | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 7,195,008 | 7,031,445 |
| | பணிக்கொடை | 8,115,151 | (115,661) |
| | போக்குவரத்து (உள்ளூர்) | 2,104,513 | 2,162,098 |
| | பதவியணியினருக்கான சீருடை | 222,168 | 451,321 |
| | புதவியணி நலன்புரி | 5,528,905 | 4,404,190 |
| | ஊழியர் நட்டஈடு | 246,300 | 100,000 |
| | மருத்துவக் கட்டணங்கள் | 4,216,211 | 4,500,000 |
| | மருத்துவ நிதியம் | - | - |
| | போக்குவரத்துப் படிப்பணம் | 5,228,000 | 3,585,250 |
| | | **130,071,227** | **116,196,580** |

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **32** | **ஊக்குவிப்புச் செலவுகள்** | | |
| | பயணம் - வெளிநாடுகள் | - | 2,307,720 |
| | கண்காட்சிச் செலவினங்கள் - உள்ளூர் | 14,049,238 | 25,296,665 |
| | கண்காட்சிச் செலவினங்கள் - வெளிநாடுகள் | 10,173,420 | 4,001,221 |
| | விளம்பரப்படுத்தல் - உள்ளூர் | 4,858,957 | 5,480,298 |
| | விளம்பரப்படுத்தல் - வெளிநாடுகள் | - | - |
| | ஏனையவை | 1,726,131 | 1,312,072 |
| | அறவிடப்படாத மீதியின் பதிவழிப்பு | - | 9,786,538 |
| | செலவினங்களின் குறை ஏற்பாடு | - | - |
| | | **30,807,746** | **48,184,513** |

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **33** | **தேறிய நிதி வருமானம்** | | |
| | **வட்டி வருமானம்** | | |
| | நிலையான வைப்புகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 109,662,052 | 47,138,919 |
| | பதவியணி கடன் மீதான வட்டி | 479,945 | 489,228 |
| | | **110,141,997** | **47,628,147** |
| | **வட்டிச் செலவினங்கள்** | | |
| | குத்தகைக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான பொறுப்பு மீதான நிதிக் கிரயம் | (24,500) | (24,190) |
| | | **(24,500)** | **(24,190)** |
| | | **110,117,497** | **47,603,957** |

| | | | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| **34** | **வருமான வரிச் செலவினங்கள்** | | | |
| | நடைமுறை வரிச் செலவினங்கள் | **(குறிப்பு 34.1)** | 58,691,033 | 142,736,852 |
| | கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டுச் சீராக்கம் | | - | - |
| | பிற்போட்ட வரிக் கட்டணம் /(மீட்பு) | **(குறிப்பு 6)** | 2,230,123 | 23,073,888 |
| | | | **60,921,156** | **165,810,740** |

### 34.1 உற்பத்திப் பொருளின் கணக்கீட்டு இலாபத்தினதும் நடைமுறை வரிச் செலவினத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்

| | | |
|---|---|---|
| வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | **120,084,001** | **350,928,300** |
| ஒட்டுமொத்த அனுமதியற்ற விடயங்கள் | 146,720,857 | 44,667,653 |
| ஒட்டுமொத்த அனுமதியான விடயங்கள் | (26,491,622) | (32,435,041) |
| ஏனைய வளங்களிலிருநதான வருமானம் | (143,825,087) | (78,053,179) |
| **வியாபார மற்றும் வர்த்தகத்திலிருந்தான இலாபம் / (நட்டம் )** | **96,488,149** | **285,107,733** |
| வரிக்கு உட்பட்ட ஏனைய வருமானம் - வட்டி வருமானம் | 141,563,392 | 65,717,767 |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | **238,051,541** | **350,825,500** |
| விதிப்பனவுகளுக்கு உட்பட்ட கொடுப்பனவு | (101,525,000) | (2,657,000) |
| பயன்படுத்தப்பட்ட வரி இழப்புகள் | - | (86,240,991) |
| **மதிப்பிடப்பட்ட வருமானம் / வரி வருமானம்** | **136,526,541** | **261,927,509** |
| நியதிச்சட்ட வரி விகிம் 28% படி விதிக்கப்பட்ட வரி | 38,227,431 | 73,339,703 |
| மொத்த பங்கிலாபத்தின் மீதான வரி | 20,463,602 | 69,397,149 |
| **ஆண்டிற்கான வழமையான நடவடிக்கைகள் மீதான நடைமுறை வரி** | **58,691,033** | **142,736,852** |
| **வரி இழப்புகள்** | | |
| **முன்கொண்டு வரப்பட்ட இழப்பு** | - | **86,240,991** |
| ஏற்பட்ட இழப்பு | - | - |
| பயன்படுத்தப்பட்ட இழப்பு | - | **(86,240,991)** |
| **முன்கொண்டு செல்லப்பட்ட இழப்பு** | **-** | **-** |

**35. மூலதன மற்றும் ஏனைய கடப்பாடுகள்**

அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் சபைப் பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பொருண்மையான மூலதனச் செலவினங்களோ அல்லது ஏனைய நிதிக் கடப்பாடுகளோ இருக்கவில்லை.

**36. அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்**

திசெம்பர் 31 ஆம் திகதியான அறிக்கையிடற் திகதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கும் இடையே இந் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கங்கள் தேவையான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

**37. நிகழத்தக்க பொறுப்புகள்**

வழமையான வியாபார நடவடிக்கையின் போது எழும் சட்டக் கோரல்கள் தொடர்பாக அதிகாரசபை நிகழத்தக்க பொறுப்புகளைக் கொண்டுள்ளது. ஓர் ஏற்பாடாக ஏற்பிசைவு செய்யப்பட்டாலன்றி (குறிப்பு 27), இக் கோரல்கள் நடுநிலைத்தன்மையற்றவையெனவும் அவற்றின் தீர்ப்பனவிற்காக வளங்களின் வெளிப்பாய்ச்சல் பின்தங்கியதாகவுமே முகாமைத்துவம் கருதியுள்ளது. இம் மதிப்பீடானது அதிகாரசபையின் நீதிப் பிரிவின் ஆலோசனையுடன் இணங்குவதாகும்.

**38. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்**

அதிகாரசபையின் தொடர்புடைய தரப்பினரில் இலங்கை திறைசேரி, அரச சார்பான நிறுவனங்கள், அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ தரப்பினர் உள்ளடங்குவர்.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் ரூபா 116,297,121 தொகையான மீதியுடனும் இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியுடனும் இலங்கை இரத்தினக்கல் ஆபரண அமைப்புடன் வரையறுக்கப்பட்ட இலங்கை இரத்தினக்கல் ஆய்வுகூடம் (தனியார்) ஸ்தாபிக்கப்பட்டது.

**38.1 முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS.24 தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களின் படி தொடர்புடைய தரப்பினரின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிடல், வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்குப் பொறுப்புடையவர்களாவர். இதன் படி, பணிப்பாளர் சபை முக்கிய முகாமைத்துவ நபர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.**

| | 2013 | 2012 |
|---|---|---|
| ஊதியமும் ஏனைய குறுங்கால ஊழியர் நலன்களும் | 2,011,950 | 2,011,950 |
| பின் உழைப்பு நலன்கள் | 20,056 | 20,056 |

**38.2 தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரசபை மேற்கொள்ளும் முக்கியமான தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறாகும்.

| தொடர்புடைய தரப்பினர் | அறிக்கையிடற் காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | மீதி முதிர்வு வரை / (முதிர்விலிருந்து) |
|---|---|---|---|
| அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் | 876,781,011 | |
| | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான மீளப் பெறல்கள் | 34,545,451 | 842,235,560 |
| | ரீப்போ முதலீடுகள் | 83,454,600 | |
| | ரீப்போக்களின் மீளப் பெறல்கள் | 41,219,753 | 42,234,847 |
| ஏனைய அரச சார்பு நிறுவனங்கள் | பங்கு முதலீடுகள் | | 1,000,000 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம் 2/ஜே/என்ஜீஜே/1/13/1   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2014 செப்தெம்பர் 03

தலைவர்,
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

**தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான (எஸ்எல்ஏஎஸ்) தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இ.க.நி. இல. 7 | (i) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வரித்தொகை ரூபா 135,980,365 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 73,880,544 எனக் காட்டப்பட்டிருந்தது. |
| | (ii) மீளாய்வாண்டில் சொத்துக்களை கையேற்பதற்காக ரூபா 12,141,003 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சொத்துக்களிற்கு ரூபா 29,072,500 சீராக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சீராக்கம் உள்ளடங்கலாக முதலீட்டு நடவடிக்கை காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 41,213,503 காட்டப்பட்டிருந்தது. |
| | (iii) மீளாய்வாண்டினுள் காசாகக் கிடைத்திருந்த மொத்த பங்கிலாபம் ரூபா 901,934 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 811,171 எனக் காட்டப்பட்டிருந்தது. |
| | (iv) மீளாய்வாண்டில் சொத்துக்கள் விற்பனையால் கிடைத்திருந்த தொகை ரூபா 130,700 ஆன |

போதிலும் சொத்துக்களிற்குச் செய்யப்பட்டிருந்த ரூபா 449,500 சீராக்கலையும் சேர்த்து காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 934,608 எனக் காட்டப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டில் சொத்துக்களின் வழக்கிழப்பிற்காக ரூபா 1,952,934 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 37,001,579 எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இ.க.நி. இல. 16

2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு குறைத்தெழுதப்பட்ட பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட ரூபா 31,300,527 பெறுமதியான 12 வாகனங்களின் சந்தைப் பெறுமதி புத்தகங்களில் காட்டப் படாதிருந்ததுடன் நடைமுறையால்லாத சொத்துக்களினுள் ரூபா 8,275,635 கிரயமான புத்தகப் பெறுமதி பூச்சியமாகவுள்ள பயன்படுத்தப்படாத சொத்துக்களான ஆபரணங்கள், இயந்திரங்கள் மற்றும் கவுடா உபகரணங்கள் உள்ளடங்கியிருந்தன.

(இ) இ.க.நி. இல. 32 மற்றும் 39

முதிர்ச்சித் திகதி வரை வைத்திருக்கும் நோக்குடன் முதலீடு செய்யப்பட்டிருந்த (HTM) ரூபா 216,381,558 மற்றும் ரூபா 625,854,003 தொகையான நிலையான வைப்பு முதலீடுகளின் வட்டி எளிய வட்டி விகிதத்தில் (EIR) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 43,140,179 தொகையான 7 வாகனங்களிற்காக அந்த அந்த ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்காமை காரணமாக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 7,958,059 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஆபரண வழங்குனர்களிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 540,937 தொகையினை குறித்த கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது ஆபரணங்கள்

அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அக்கணக்கின் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு மோட்டார் வாகனங்களிற்காக கையேற்கையில் செலுத்தப்பட்ட ரூபா 542,250 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் மொத்தப் பெறுமதியும் கணிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

காணி ஏல விற்பனைக்காகவும் 10 சதவீத பிடிகாசிற்காகவும் செலுத்த வேண்டிய முறையே ரூபா 23,148,095 மற்றும் ரூபா 2,568,825 தொகைகள் 5 ஆண்டு காலம் முதல் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் விடயங்களிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| பெலிதெனிய காணி | 889,000 | உரித்துறுதி |
| நாஉல காணி | 538,800 | உரித்துறுதி |
| ரத்னதீப காட்சிக்கூடம் புதுப்பித்தல் ஒப்பந்தம் | 2,724,037 | ஒப்பந்த உடன்படிக்கை, பற்றுச் சீட்டுக்கள், வேலை முடிவுறுத்தல் சான்றிதழ் |

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 5.2.6 ஆம் பந்தி | ஆட்சேர்ப்பு, பதவியுயர்த்தல் என்பவற்றிற்காக அமைச்சின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய |

தெரிவுச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது ஆளுகைச் சபையின் தனிப்பட்ட சிபார்சுகளில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை

நி.பி. 142(2) — அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய கட்டணம் அல்லது சாட்டுதல் மீது சேவையொன்றை ஆற்றுகையில் அனுமதிப்பத்திரம், உத்தரவுப் பத்திரத்தினை வழங்குதலின் போதான அறவிடல்கள் தேறப்படும் வரை அச்சேவையினை நிறைவேற்றக்கூடாத போதிலும், மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் இறக்குமதியின் போது இறக்குமதிப் பெறுமதியின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 1,015,158 ஆன சேவைக் கட்டணங்கள் 02 முதல் 16 நாட்கள் வரையான காலதாமதத்துடன் அறவிடப்பட்டிருந்தது.

நி.பி. 371(பீ) — ஏதேனுமோர் நடவடிக்கைக்காக வழங்கப்படுகின்ற முற்பணத் தொகை ரூபா 20,000 இனை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும், அந்த எல்லையினை தாண்டி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை

2.7.5 ஆம் வழிகாட்டல் — திணைக்களக் கொள்வனவுச் சபைக்காக வரிசை அமைச்சின் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,383,533 தொகையான ரத்னதீப காட்சிக் கூடத்தின் புதுப்பித்தல் ஒப்பந்தத் திற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| | 2.8.4 ஆம் வழிகாட்டல் | மேற்படி ஒப்பந்தத்திற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக அமைச்சின் உறுப்பினர் ஒருவர் அல்லது வெளிவாரி நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 39 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் அதிகாரசபையின் தலைவரினால் ரூபா 364,000 பெறுமதிகொண்ட 2,291 லீற்றர் எரிபொருளும் பணிப்பாளர் நாயகத்தினால் ரூபா 400,007 பெறுமதிகொண்ட 2,476 லீற்றர் எரிபொருளும் பணிப்பாளர் (காணி, அகழ்வுகள் மற்றும் சுற்றாடல்) இனால் ரூபா 396,856 பெறுமதிகொண்ட 3,282 லீற்றர் எரிபொருளும் முன் அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | தனிப்பட்ட பாவனைக்காக உத்தியோகபூர்வ வாகனங்களிற்கு உரித்தற்ற அதிகாரசபையின் 8 சிரேஸ்ட உத்தியோகத்தர்களிற்கு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமல் உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2011 நவம்பர் 03 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ2/33/7/2013/3 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக புதிய பதவிகள் உருவாக்கப்படக் கூடாத போதிலும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்/இரத்தினக்கல் ஆராய்ச்சியாளர் ஒரு பதவியாக இருந்த போதிலும், 2 பதவி களுக்காக பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (எ) | 2011 திசெம்பர் 21 ஆந் திகதிய தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வெளிநாட்டு கண்காட்சிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 251,265,020 பெறுமதியான மாணிக்கக்கல் இருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அந்த மாணிக்கக்கல் இருப்பிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 807,467 சேவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வர்த்தக நிலையத்தில் அமைந்துள்ள ரத்னதீப காட்சியகத்தினை புதுப்பித்தல் ஒப்பந்தத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 2,383,533 இனை மிகைத்து குறித்த ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 340,504 தொகை கொள்வனவுச் சபையின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் கடைகளிற்கான உத்தரவுப்பத்திரங்களை வருடாந்தம் புதுப்பிக்கையில் அறவிடப்படுகின்ற ரூபா 5,000 உத்தரவுப்பத்திரக் கட்டணத்தை உபயோகித்து மாணிக்கக்கல் கைத்தொழிலின் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக தாபிக்கப்பட்டுள்ள மாணிக்கக்கல் ஆபரணங்கள் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 2,456,515 தொகை வேறு நடவடிக்கைகளிற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 120,084,002 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றானதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 350,928,300 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 230,844,298 வீழ்ச்சியைக் காட்டுகின்றது. நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 104,460,767 இனால் குறைவடைந்திருந்தமையும் செலவினம் ரூபா 126,383,532 ஆல் அதிகரித்திருந்தமையும் தாக்கமளித்திருந்தன.

வருமானத்தினுள் அடங்கியுள்ள காணி ஏல விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 260,274,001 இனால் குறைவடைந்திருந்தது.

### 3.2 இலாபத்தன்மை

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 219,443,811 | 228,963,191 | 250,300,467 | 612,003,941 | 507,543,175 |
| செலவினம் | 230,941,998 | 261,929,677 | 222,488,066 | 261,075,641 | 387,459,173 |
| வரிக்கு முன்னர் இலாபம் (நட்டம்) | )11,498,187( | )32,966,486( | 27,812,401 | 350,928,300 | 120,084,002 |

இதன் படி கடந்த பல வருடங்கலாக அதிகாரசபையின் இலாபத்தன்மை பாரிய பின்னடைவிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் மொத்த வருமானம் ரூபா 104,460,767 ஆல் அல்லது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் மொத்த செலவினம் ரூபா 126,383,532 ஆல் அல்லது 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட தேறிய காசப் பாய்ச்சல் ரூபா 90,541,060 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் ரூபா 404,192,548 ஆகக் காணப்பட்டது.

(ஈ) உரிமை மூலதனத்துவத்திற்கு செயற்பாட்டு இலாப விகிதம் முன்னைய ஆண்டில் 33.5 சதவீதமான போதிலும், மீளாய்வாண்டில் 1.02 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்படி அதில் குறிப்பிடத்தக்க பின்னடைவு அவதானிக்கப்பட்டது.

### 3.4 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தினாலும் தொடங்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏழு வெளிவாரி நபர்களால் ரூபா 3,400,000 இழப்பீடு கோரப்பட்டு அதிகாரசபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 7 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) அரசாங்க நிதியினை மோசடி செய்திருந்தமை தொடர்பில் வெளிவாரி நபர் ஒருவருக்கு எதிராக அதிகாரசபையினால் ரூபா 2,964,625 தொகையையும் அதற்குரிய நட்டத்தினையும் அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

### 3.5 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பின்வரும் செலவினங்களில் அசாதாரண அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | 2013 | 2012 | அதிகரிப்பு | அதிகரிப்பின் சதவீதம் | அவதானிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வாகன பராமரித்தல் செலவினம் | 4,213,686 | 2,001,638 | 2,212,048 | 110 | வாகன சேவை செய்தலுக்கான செலவு அதிகரித்திருந்தது. |
| சட்டச் செலவினம் | 3,668,733 | 606,339 | 3,062,394 | 505 | எதிர்பார்க்கப்பட்ட சட்டச் செலவினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| இழப்பீட்டிற்கான ஒதுக்கம் | 3,400,000 | 195,300 | 3,204,700 | 1641 | பல்வேறு வழக்குகளிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு | 25,259,064 | 13,093,088 | 12,165,976 | 93 | புதிய மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. |
| போக்குவரத்துப் படி | 5,228,000 | 3,585,250 | 1,642,750 | 46 | படித் தொகைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. |
| பணிக்கொடை | 8,115,151 | )115,661) | 8,230,812 | 7166 | பணிக்கொடைச் சீராக்கலுக்காக புதிய கணக்கீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 இரத்தினக்கல் அகழும் இடங்கள் ஏலவிற்பனை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருவித்த நாலந்த எல்லாவல கைத்தொழில் பேட்டைக்காக ஒதுக்கப்பட்ட காணியை இரத்தினக்கல் அகழ்வுக்காக விடுவித்துக் கொள்வதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பரவர்தன ஓய மற்றும் ஹசலக ஓய இரத்தினக்கல் அகழும் காணிகள் ஏலமிடப்பட்டிருந்த போதிலும், கொள்வனவாளர்களில் சிலர் கூறு விலையில் முற்பணத்தினைச் செலுத்தியிருந்ததுடன் மொத்தத் தொகையினையும் பெற்று இரத்தினக்கல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 இரத்தினங்கள் மற்றும் ஆபரங்களை ஏற்றுமதி செய்தல்

(அ) வெட்டி பட்டை தீட்டப்பட்ட இரத்தினங்களை ஏற்றுமதி செய்தலிற்கான விசேட செயற்திட்டம் (NSS)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யூ.எஸ்.டொலர் 1,500 கட்டணம் ஒன்றைச் செலுத்தி பரிசோதனை செய்யப்படாது ஏற்றுமதி செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் பொதிகள் தொடர்பில் 33 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், விமான நிலைய சுங்கத்தினால் உறுதிச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டு அதற்குரிய சிட்டைகளுடன் அதிகாரசபைக்கு மீள அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், 10 உறுதிச்சீட்டுக்கள் திரும்பக் கோருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இரத்தினக்கல் ஏற்றுமதி பெறுமதிகளின் சரியான புள்ளிவிபரங்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கு அதிகாரசபைக்கு முடியாது போயிருந்தது.

(ii) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஊ பிரிவின் படி, சட்டவிரோதமாக இரத்தினக்

கற்களை இலங்கையிலிருந்து அகற்றுதலைத் தடுத்தல் அதிகாரசபையின் முக்கிய பணியான போதிலும், புதிய நடைமுறையின் படி இரத்தினக்கல் ஏற்றுமதியின் போது அதிகாரசபையின் மதிப்பீட்டாளர்கள் இரத்தினக்கற்களைப் பரிசோதித்து விலைமதிப்பீட்டைச் செய்யாதிருந்தமையால் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்காக இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்கையில் செயற்பாட்டிலுள்ள சேவைக்கட்டண நிவாரண நடைமுறை (Service Fee Waiver Facility)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்ற அதிகூடிய பெறுமதி கொண்ட அதிக எண்ணிக்கையான இரத்தினக் கற்கள் விற்பனை செய்யப்படாது மீளக் கொண்டுவரப்பட்டிருந்தமையால் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இரத்தினக் கற்களே மீண்டும் எடுத்துவரப்பட்டிருந்ததா என்பதனை ஆய்ந்தறிவதற்காக புகைப்படமெடுத்தல் மற்றும் அளவீடு செய்தல் போன்ற கட்டுப்பாட்டு முறைகள் அதிகாரசபையால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளிநாட்டு ஆய்வுகூட பரிசோதனைக்காக சேவைக் கட்டண நிவாரண அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 6,096,256 ஏற்றுமதிப் பெறுமதி கொண்ட இரத்தினக்கற்கள் தொடர்பில் ஏற்றுமதிக்குத் தேவையான அங்கீகாரம், வெளிநாட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரத்தினக்கல் ஏற்றுமதிக்காக வர்த்தக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரத்தினக்கல் அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இரத்தினக்கல் இருப்பின் பெறுமதியின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படுவதுடன் குறைந்த பெறுமதி கொண்ட அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் அதிக பெறுமதி கொண்ட இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்கையில் தமது அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக உயர் பெறுமதிகளுக்கு ஏற்ற வகையில் புதுப்பித்துக் கொள்கின்றனர். அது தொடர்பில் பரீட்சிப்பதற்கு பொருத்தமான முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபையின் பிரசைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், நாற் சேவையின் கீழ் ரூபா 1,000 மேலதிக கட்டணத்தை அறவிட்டதன் பின்னர் வர்த்தக அனுமதிப்பத்திரங்களை வழங்குதற்கான முறையொன்று காணப்பட்ட போதிலும்,

இருப்பு எல்லை அதிகரிப்பதன் மீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய புதிய அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது..

### 4.1.3 உலக வர்த்தக நிலையத்திலுள்ள கடைகளை வாடகைக்கு வழங்குதல்

உலக வர்த்தக நிலையத்திலுள்ள 8700 சதுர அடிகளை வாடகை அடிப்படையில் பெற்று இரத்தினக்கற்கள் மற்றும் இரத்தினக்கற்கள் பதித்த ஆபரண கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாடகை அடிப்படையில் கடைகள் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்டிருந்த கடைகளில் 4 கடைகளுக்காக 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,404,560 நிலுவை வாடகையினை அறவிட்டுக் கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் இரண்டு வழக்கறிஞர்கள் உட்பட 4 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சட்டப் பிரிவொன்று நிறுவனத்தில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2012/2013 ஆம் ஆண்டுகளிற்குரிய வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான சட்டக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 177,944 தொகையில் 50 சதவீதமான ரூபா 88,972 தொகை சட்ட உத்தியோகத்தர்களுக்கு நொத்தாரிசுக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த பெயர்களிற்கும் நிறுவனத்தின் சம்பளம் மற்றும் கூலிகளைப் பெற்றுக்கொள்கையில் பயன்படுத்தப்பட்டிருந்த பெயர்களிற்குமிடையே வேறுபாடுகளை காண முடிந்தது.

(இ) வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்காத மூன்று கடைகளிற்கான சட்டக் கட்டணமாக ரூபா 54,329 அறவிடப்பட்டிருந்ததுடன் 2 கடைகளிற்கான உள்ளபடியான வாடகைப் பெறுமதியை ரூபா 305,048 குறைத்து உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் முத்திரைக் கட்டணம் ரூபா 3,050 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2013/2014 ஆம் ஆண்டிற்காக 11 கடைகளிற்கு வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் எஞ்சிய 26 கடைகளிற்கான வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுதல் நிறுவனத்தின் அலுவலக

முத்திரையினைப் பயன்படுத்தி சட்ட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையில் சேவையிலுள்ள பெண் சட்ட உத்தியோகத்தருக்கு அவிஸ்ஸாவெல்ல உயர் நீதிமன்ற அதிகாரப்பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணிகளிற்காக மாத்திரம் உறுதிகளை எழுதக்கூடிய உரித்துக் காணப்பட்ட போதிலும், கொழும்பு உயர் நீதிமன்ற அதிகாரப்பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணிகள் மற்றும் ஆதனங்கள் தொடர்பான வாடகை உடன்படிக்கைகளிலும் அந்த உத்தியோகத்தர் கைச்சாத்திட்டிருந்தார்.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றாடல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டுவருகின்ற டபிள்கெப் வாகனமொன்று விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் ஏற்பட்டிருந்த நட்டத்தினை மதிப்பிட்டு பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2009 ஆம் ஆண்டில் ரூபா 92,948,578 தொகை வழங்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் மாதமளவிலும் அந்த ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் இத் தொகை அந்த நிறுவனத்தினால் 2009 முதல் முதலீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 39,079,371 வட்டி உழைக்கப்பட்டிருந்ததுடன் வட்டி வருமானம் அதிகாரசபைக்கு இழப்பாகியிருந்தது.

(இ) உலக வர்த்தக நிலையத்தில் 575 சதுர அடிகள் விஸ்தீரணத்தில் தாபிக்கப்பட்டுள்ள ரத்னதீப காட்சிக்கூடத்திற்காக ரூபா 2,995,700 செலவு மீளாய்வாண்டின் இறுதியளவில் செய்யப்பட்டிருந்தது. சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி பிரதேசத்தில் ஆய்வுகூடமொன்றை ஆரம்பிப்பதற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,352,949 பெறுமதியான உபகரணங்கள்

விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்கு 2014 மார்ச் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002, 2003, மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 443,000 பெறுமதியான 05 நிழற்பட பிரதியெடுத்தல் இயந்திரங்கள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் இறுதியளவிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 220 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான ஊழியர் கோப்பு 181 ஆக காணப்பட்டமையால் 39 வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடமாகக் காணப்பட்ட 14 பதவிகள் பதவிநிலை தரங்களாகக் காணப்பட்டதுடன் 24 பதவிகள் பதவிநிலையற்ற தரங்களாகும். இருப்பினும், ஒப்பந்த அடிப்படையில் 55 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி பூரணத் தகமையற்ற 4 உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

## 4.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

ரூபா 39,694,672 ஏற்றுமதிப் பெறுமதி கொண்ட 62 இரத்தினக்கற்கள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கான ரூபா 1,000 கட்டணம் செலுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. பின்னர் இந்த இரத்தினக் கற்களில் 22 கற்கள் வெளிநாட்டுக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. கையாளல் கட்டணமாக ரூபா 10,000 செலுத்தப்பட்டு சேவைக்கட்டண நிவாரண வசதியடிப்படையில் (Service fee waiver facility) ஏற்றுமதி செய்யப்படாதிருக்கையில் விற்பனை செய்யப்பட்ட விடயங்களிற்கு மாத்திரம் சேவைக் கட்டணமாக ரூபா 45,885 அறவிடப்பட்டிருந்தது. இதன் படி அறவிடப்பட வேண்டிய ரூபா 198,473 சேவைக் கட்டணம் அறவிடப்படாமையால் அதிகாரசபைக்கு ரூபா 152,588 இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 4.6 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

மனித வள முகாமையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்கையில் 8 சம்பள ஏற்றங்கள் மேலே வைக்கப்பட்டு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி மீளாய்வாண்டில் சம்பளமாக ரூபா 79,200 தொகையும் விடுமுறைப் படி மற்றும் ஊக்குவிப்புப் படியாக ரூபா 36,844 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையிடம் முன்னைய ஆண்டில் காணப்பட்ட 23 வாகனங்களை உள்ளடக்கிய வாகன அணியே மீளாய்வாண்டின் இறுதியிலும் காணப்பட்டது. இந்த வாகனங்களின் பயன்படுத்தல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| எரிபொருள் நுகர்வு | 8,532,071 | 7,066,448 |
| டயர் மற்றும் ரியூப்களை பொருத்துதல் | 1,254,082 | 587,342 |
| பராமரித்தல் செலவினம் | 4,213,686 | 2,001,636 |
| அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 1,316,336 | 1,765,808 |
| மொத்தம் | 15,316,175 | 11,421,234 |

அதன் படி 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாகனங்களிற்கான செலவினம் ரூபா 3,894,941 ஆல் அதாவது 34 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) தலைவரினால் பயன்படுத்தப்படுகின்ற கார் 2013 பெப்ரவரி முதல் 2014 பெப்ரவரி வரையான ஓராண்டு காலத்தினுள் ஓடப்பட்டிருந்த ஏறத்தாழ 23,415 கிலோமீற்றர் தூரத்திற்காக 10 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 328,530 செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

அதிகாரசபையின் முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் 2012 ஆம் ஆண்டில் முறையே ரூபா 728,501 மற்றும் ரூபா 276,488 பெறுமதியான மேலதிக எரிபொருள் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அத் தொகையினை அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை உருவாக்குதல்

பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு ரூபா 23,995,857 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், ஏற்படக்கூடிய பொறுப்புகளைத் தீர்த்து வைப்பதற்கு நிதி வழங்கப்படுவதற்கான நடைமுறை ஒன்று அமுலில் இருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் படி பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருெக்கவில்லை.

| பிரிவு | விபரம் |
|---|---|
| 14 – டீ | தொழிற்துறையின் முன்னேற்றத்திற்காக விசேடமாக பட்டை தீட்டல் மற்றும் இரத்தினக்கற்களை வெட்டுதல் தொடர்பில் ஆட்களைப் பயிற்றுவிப்பதற்கு பொறுப்பேற்றல் மற்றும் முன்னேற்றுதல் |
| 14 – ஈ | எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் தொழிலின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |
| 14 – எவ் | இரத்தினக்கற்களை சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லல் மற்றும் சட்ட விரோத மாணிக்கக்கல் |

அகழ்வினை நிறுத்துதல்.

14 – எம் — இலங்கையினுள் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலை முன்னேற்றுவதற்காக அரசாங்க திணைக்களங்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அதிகாரசபையின் பௌதீக செயலாற்றல் நிதிசார் தகவல்களுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| | இலக்கிடப்பட்ட பணிகள் | உள்ளபடியான செயலாற்றல் |
|---|---|---|
| (அ) | இரத்தினக்கல் மற்றும் ஆபணரக் கைத்தொழில் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை வரைதல் | 2009 – 2013 கூட்டிணைந்த திட்டத்தின் படி 2010/2011 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தி பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய பணியொன்றாக இது இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலேனும் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. |
| (ஆ) | இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் புள்ளி விபரமெடுத்தலை ஏற்படுத்துதல் | கூட்டிணைந்த திட்டத்தின் படி 2009/2010 ஆம் ஆண்டுகளில் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்வு வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சகல ஆபரண உற்பத்திகளின்போதும் பெறுமதிவாய்ந்த உலோகங்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் முத்திரை பொறித்தல் தொடர்பான சட்டரீதியான செல்லுபடித்தன்மையைப் பெற்றுக் கொள்ளுதல் | இது தீவு முழுவதற்கும் விஸ்தரிக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டில் காலி நகரத்தில் ஆய்வுகூடமொன்றை ஆரம்பிப் பதற்காக ரூபா 85 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது. |
| (ஈ) | கெவுடா ஏற்றுமதியை "0" வரை குறைத்தல் | மீளாய்வாண்டில் பட்டைதீட்டல் வசதிகள், பயிற்சி மற்றும் பயனுள்ள கிரய முறைகளை |

| | | |
|---|---|---|
| | | அறிமுகம் செய்வதற்காக ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் முன்னேற்றமேதும் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வுகளை நிறுத்துவதற்கு விசேட படையணியை நிறுவுதல் | மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இரத்தின மற்றும் ஆபரண ஏற்றுமதிகளின் பெறுமதியை அதிகரித்தல் | மீளாய்வாண்டில் 08 வெளிநாட்டுக் கண்காட்சிகள் திட்டமிடப்பட்டு ரூபா 17.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் செயன்முன்னேற்றம் 50 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. |
| (எ) | சிறந்த போட்டியினையும் வளங்களையும் பெற்றுக்கொள்வதற்காக இரத்தின மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் கேள்விக்கு ஏற்ற மனித வளத்தினை தோற்றுவித்தல் | இரத்தின மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பில் நேரடியாகத் தொடர்புபடுகின்ற பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>உதவிப் பணிப்பாளர் (விலைமதிப்பு/ இரத்தினக்கல் நிபுணர்)<br>அபிவிருத்தி உதவியாளர்<br>சுற்றாடல் உதவியாளர்<br>ஏற்றுமதி சேவைகள் உதவியாளர்<br>விலைமதிப்பு/இரத்தினக்கல் ஆய்வு நிபுணத்துவ உதவியாளர்<br>ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| (ஏ) | விபரமான நலனோம்பல் முறையொன்றை ஏற்படுத்துவதன் ஊடாக சமூகப் பொறுப்பை ஏற்படுத்துதல் | இரத்தினக்கல் அகழ்வுத் தொழிலாளர்களுக்கு (Gem mining community) நலனோம்பல் முறையொன்றை ஏற்படுத்துதல் மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஐ) | இரத்தினக்கற்களை பரிசோதித்து சான்றிதழ் வழங்கும் உயர் ஆய்வுகூடமொன்றை ஏற்படுத்துதல் | மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

## 5.3 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் வழகாட்டலின் படி, ஒவ்வொரு பிரிவுகளின் தேவைகளை வெவ்வேறாக இனங்கண்டு அதற்கமைய ஒவ்வொரு காலப்பகுதியிலும் வழங்கப்பட வேண்டிய சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளைக் கொண்ட விபரமான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட தகவல்களிற்கும் உள்ளபடியான தகவல்களிற்குமிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2014 மே மாதம் வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையின் மூலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனப் பராமரிப்பு

(இ) இரத்தினக்கல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரப் பிரமாணங்களை மேற்பார்வை செய்தல்

(ஈ) இரத்தினக்கல் காணிகளை ஏலமிடல்

(உ) மனிதவள முகாமைத்துவம்

(ஊ) முற்பணங்களை வழங்குதல்

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி